Registered as a Newspaper
பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 281

ஞாயிற்றுக்கிழமை 03 செப்ரெம்பர் 2023

## பட்டப்பகலில் பழ வியாபாரி கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், செப். 3
கல்வியங்காடு எரிபொருள் நிலையத்துக்கு அருகில் பழக்கடை நடத்தி வரும் 23 வயதான »13

போரின் பின்னர்

# வடக்கின் குடிப்பரம்பலில் மிகப் பெரிய மாற்றங்கள்

சிங்கள, முஸ்லிம் குடித்தொகை இருமடங்காக அதிகரிப்பு

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 3**

**போரின் பின்னரான 14 ஆண்டுகளில் வடக்கின் குடிப்பரம்பலில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களின் குடித்தொகை இரண்டு மடங்கால் வடக்கில் அதிகரித்துள்ளமை மாவட்டச் செயலகங்களிலிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெறப்பட்ட தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது.** »15




## தீவகத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் மட்டுப்படும்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 3
கடும் வறட்சி காரணமாக நாளை தொடக்கம் மண்டைதீவு மற்றும் ஊர்காவற்றுறை »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
Fitch Rating: "A" (lka)
செலான் வங்கி

திருகோணமலை

## விகாரைக்கு எதிரான போராட்டம் நீதிமன்றம் தடையுத்தரவு

திருகோணமலை, செப். 3
இலுப்பைக்குளத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து மனித சங்கிலிப் போராட்டத்தை இன்று நடத்துவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், போராட்டத்தில் ஈடுபடுவதற்கு 14 பேருக்கு தடைவிதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. »13

பூட்டிய வீடுகள் குறிவைப்பு

## ஒரு வாரத்தில் 12 திருட்டுகள்

யாழ்ப்பாணம், செப். 3
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், கடந்த ஒரு வாரத்தில் பூட்டப்பட்டிருந்த 12 வீடுகளில் பட்டப் பகலில் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன. இதனால் வீடுகளை விட்டு »15

## ஐ.எம்.எப். நிபந்தனையை நிறைவேற்றுவதில் தாமதம்

மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 3
உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்கும் நிபந்தனையை கடந்த ஜூலை மாத இறுதிக்குள் நிறைவேற்ற முடியாது போயுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க »15

ஒரே வாரத்தில்

## இணைய சூதாட்டத்தில் ரூ.72 லட்சம் பறிகொடுப்பு

சந்தேகநபர் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், செப். 3
காசோலை மோசடி தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட உரும்பிராயைச் சேர்ந்த சந்தேக நபர், மோசடி செய்த பணத்தை ஒரே வாரத்தில் இணையத்தின் ஊடான சூதாட்டத்தில் »15

## இராணுவப் பேருந்துக்கு தீ வைத்தவர் கைது

கொழும்பு, செப். 3
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இல்லத்துக்கு முன்பாக இராணுவப் பேருந்துக்குத் தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் குற்றப்புலனாய்வு »15

வேலியே பயிரை மேய்கிறது:

## பாதுகாப்புக்காக குந்திய இராணுவமே கோட்டை அகழிக்குள் மீன்பிடிக்கிறது

தொல்பொருள் சின்னத்தைச் சேதப்படுத்தும் நடவடிக்கை என்று குற்றச்சாட்டு »15

## மோ.சைக்கிள் மீட்பு!

யாழ்., செப். 3
சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியில் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்கள் பயணித்த வாகனம் மீட்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
கடந்த 28ஆம் திகதி தம்பதியினரும் இரு குழந்தைகளும் »15



## உடனடியாக ஜனாதிபதித் தேர்தல்; திருத்தங்களுக்கு ஆதரவளிப்போம்

அநுர வெளிப்படையாக அறிவிப்பு

கொழும்பு, செப். 3
உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசமைப்பில் திருத்தங்கள் கொண்டு வரப்படுமாயின் அதற்கு ஆதரவு வழங்க தேசிய மக்கள் சக்தி தயாராக »15

இந்திய பாதுகாப்பு அமைச்சரின் பயணம்

## மோசமான காலநிலையாலேயே ஒத்திவைக்கப்பட்டதாம்!

கொழும்பு, செப். 3
இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் பயணம் மோசமான காலநிலை எதிர்வு கூறல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இரு நாள் பயணமாக அவர் நேற்று வருகை தரவிருந்த நிலையில் கடைசி நிமிடத்தில் பயணம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப் »15

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அஸ்வெசும' கொடுப்பனவு; மறுகட்டம் திங்கள் முதல்!

கொழும்பு, செப். 3
மேலும் 5 இலட்சம் பயனாளிகளுக்கான 'அஸ்வெசும' கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

தற்போது 8 இலட்சம் பயனாளிகளுக்கான 'அஸ்வெசும' முதற்கட்ட கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இந்தநிலையில் அடுத்தகட்டமாக 5 இலட்சம் பயனாளிகளுக்கான கொடுப்பனவு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளது. அதற்கான நிதி வங்கிகளுக்கு விடுவிக்கப்படும்.

இதற்காகப் பயனாளிகளின் வங்கிக் கணக்குத் தரவுகள் சரியாகக் காணப்படுகின்றனவா எனப் பரிசீலிக்கும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

# நீரைச் சேமிப்பதற்கான வழிகளைப் பின்பற்றுக



*விவசாய அமைச்சு அறிவுறுத்து*

**கொழும்பு, செப். 3**
**பெரும்போக நெற்செய்கைக்காக நிலத்தை தயார்ப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுமாறும், தண்ணீரைச் சேமித்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறும் விவசாய அமைச்சு விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.**

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இதுதொடர்பில் விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்துமாறு விவசாய திணைக்களம் மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வானிலை முன்னறிவிப்பின் பிரகாரம், இந்தமுறை பெரும்போகத்தில் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கனமழை பெய்யலாம். அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் மீண்டும் வறட்சியான காலநிலை நிலவக்கூடும். இயன்றளவு நீரை முகாமைத்துவப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பின்பற்றவேண்டும். அதற்கமைய பெரும்போகத்துக்காக கால்வாய்களைத் தூய்மைப்படுத்தல், வாய்க்கால்களைத் தூர்வாருதல், களைகளைப் பிடுங்குதல் மற்றும் நிலத்தைத் தயார்படுத்தல் போன்ற பணிகளை விவசாயிகள் மேற்கொள்ளவேண்டும் என்று விவசாய அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)



# மணல் ஏற்றிய டிப்பர் பறிமுதல்

கிளிநொச்சி, செப். 3
சட்டவிரோதமாக மணல் ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு டிப்பர் வாகனங்கள் இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, கல்லாறுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்த டிப்பர் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், அவற்றின் சாரதிகள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை தருமபுரம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-113,27)



# வடமராட்சி கிழக்கிலுள்ள குளங்களில் சிரமதானம்!

யாழ்ப்பாணம், செப். 3
வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள குளங்கள் மற்றும் நீர்நிலைகள் என்பன துப்புரவு செய்யப்பட்டு சுத்தமாக்கப்பட்டுள்ளன.

ஒரு வாரத்துக்குள் யாழ்.மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் கைவிடப்பட்ட குளங்கள், கேணிகள் என்பவற்றை பிரதேச செயலர்களின் மேற்பார்வையின் கீழ் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து, எதிர்காலத்தில் நீரைத் தேக்கி வைக்கக் கூடியதாக மாற்ற வேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலரின் அறிவுறுத்தியுள்ளார்.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் வடமராட்சியில் கடந்த 29ஆம் திகதி மணற்காடு சந்திக்குளம், திக்கஎளிக்குளம், கீரிக்காட்டுக்குளம், உடுத்துறை பிள்ளையார்குளம், வண்ணாங்குளம் ஆகியனவும், கடந்த வியாழக்கிழமை ஊரெல்லைக்குளம், பிள்ளையார் கோயில் கேணி, நாகதம்பிரான் கோயில் குளம், சம்புக் குளம், செகிடன் குளம், ஐந்தாம் பனைப் பிள்ளையார் கோயில் கேணி, மூர்த்தியாகுளம், உணவத்தைக்குளம், மாளிக்குளம், தர்மக்குளம் ஆகியனவும் துப்புரவு செய்யப்பட்டன. (ச)



# தென்மராட்சியில் உள்ளூர்ச் சந்தை

கொடிகாமம், செப். 3
உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தை கடந்த வியாழக்கிழமை கொடிகாமம் ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றது.

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் தென்மராட்சிப் பிரதேச செயலகம் இந்த உள்ளூர் சந்தையை ஏற்பாடு செய்திருந்தது. 218 முதல் 288 வரையான கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 20 உள்ளூர் உற்பத்தியாளர்கள் இந்தச் சந்தையில் கலந்துகொண்டனர். (எ-159)

# கொள்கலன் காவுகைக்கு கட்டணங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 3
கொள்கலன் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என ஐக்கிய கொள்கலன் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தக் கட்டணம் 5 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை எரிபொருள் விலை உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கட்டண அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பாடசாலைப் போக்குவரத்து: அதிகரித்தன கட்டணங்கள்

கொழும்பு, செப். 3
எரிபொருள் விலை உயர்வை அடுத்து பாடசாலைப் போக்குவரத்துக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை பாடசாலை போக்குவரத்துச் சேவை சங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 5 வீதத்தால் கட்டண அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. டீசல் விலையேற்றத்துடன், காப்புறுதி உட்பட ஏனைய சேவைகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



வடக்கு பிராந்தியத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பாக இலங்கை உள்வரும் சுற்றுலா நடத்துவோர் சங்கம் நேற்றுமுன்தினம் வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸைச் சந்தித்துக் கலந்துரையாடியது. கொழும்பில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (எ-26.27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட் மோசடியாளர்கள் பிணையின்றி கைதாவர்!

## மத்திய வங்கி சுட்டிக்காட்டு

**கொழும்பு, செப். 3**

**சட்டவிரோத பிரமிட் திட்டங்களினூடாக பொதுமக்களைத் தவறாக வழிநடத்தி ஊக்குவிப்பவர்களை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் பிடியாணையின்றிக் கைதுசெய்ய முடியும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

தமது பிரமிட் திட்டங்கள் சட்டபூர்வமானது எனக் காட்டிக்கொள்வதற்காக தாம் மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கு ஏற்ப முதலீட்டாளர்களின் நிதிகளைப் பாதுகாப்பதாகவும் உரிய வரிகள் அரசுக்குச் செலுத்தப்படுவதாகவும் சில நிறுவனங்கள் குறிப்பிட்டு மோசடியில் ஈடுபட்டு வருகின்றன.

பிரமிட் திட்டங்களை முறையான திட்டமாகக் காட்டுவதற்கு பல்வேறு தந்திரங்கள் கையாளப்படுகின்றன. இந்த விடயத்தில் எந்தவித உண்மையும் இல்லை.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் மத்திய வங்கியின் உரிமம் பெற்ற மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.

பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களைத் தவிர ஏனைய நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்யக்கூடாது. இந்தத் திட்டங்களில் இணைவதன்மூலம் பணத்தை இழக்காது பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

சட்டவிரோத பிரமிட் திட்டங்களை ஊக்குவிப்பவர்களுக்கு எதிராகக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கமுடியும். அவர்களைப் பிடியாணையின்றி கைதுசெய்யமுடியும். இது பிணையில் வெளிவர முடியாத குற்றம் - என்றுள்ளது. (ச-இ)




# இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா கூடுதலான நிதியுதவி

கொழும்பு, செப். 3

இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நன்கொடை அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியொதுக்கீட்டை இந்திய அரசாங்கம் அதிகரித்துள்ளது.

இந்தியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இந்திய - இலங்கை உயர் பெறுபேற்று சமூக அபிவிருத்தி திட்டம்' என்ற கட்டமைப்பின்கீழ் தற்போது 9 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களுக்கான இறுதி ஒதுக்கீடானது 50 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பைத் தொடர்ந்து குறித்த 9 திட்டங்களுக்குமான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடானது 3 பில்லியன் ரூபாவை எட்டியுள்ளது. கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் வரையிலான சகலதுறைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று இந்தியத் தூதரகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

# நல்லூரில் அருளுரை

யாழ்ப்பாணம், செப். 3

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் அருளுரை நிகழ்வு வழமை போன்று இம்முறையும் சிவகுரு ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்த நிகழ்வு திருமஞ்சத்திருவிழாவில் ஆரம்பமாகி எதிர்வரும் 14ஆம் திகதி தீர்த்தோற்சவம் வரை தினமும் இரவு 7.30 மணிமுதல் 8.30 மணிவரை இடம்பெறும். அருளுரையை ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆற்றவுள்ளார்.

ஆன்மீக விழிப்புணர்வு, இறைபக்தியை அதிகரிக்கும் முகமாக இந்த அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-66)



## நல்லூரான் சிறப்பம்சம்

### நல்லைவேல் நமைக் காக்கும்

புள்ளி மயிலேறிவரும் குழந்தை வேல்!
வள்ளி தெய்வானையரின் சுந்தர வேல்!
குன்று தோறாடுகின்ற குமரவேல்!
என்றும் எமைக் காக்கின்ற கருணைவேல்!
சூரனைச் சங்கரித்து வீரவேல்!
தேவரைச் சிறைமீட்ட வெற்றிவேல்!
அலங்கார ரூபனாய் சிங்கார வேல்!
ஆற்றவெல்லாம் கொண்ட அருஞ்சக்திவேல்!
தந்தைக்கு உபதேசம் செய்த ஞானவேல்!
நல்லையிலே வீற்றிருக்கும் தங்கவேல்

*நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்*

### நல்லூர் வடிவேலா!

மண்ணில் நல்லவண்ணம் வாழ
வழிகாட்டும் வேலோனே!
வீண் சொல் வீரரின் நாவடக்கி
சீர்தரும் வேலோனே
அந்நிய ஆதிக்கத்தில் சீரழிந்த உந்தன்
பதியை குருக்கள் வளவில்
மேலோங்க வைத்தாயே
சிந்திய அடியார் அழுகுரல் கேட்டு
அருள்புரியும் வேலோனே
யாழ்.மாநகர சுற்றுச் சூழலில் மையமாய்
ஆன்மீகம் புரட்டும் வேலா!
ஊழ் அகற்றி சீர்பெற செய்யும் வேலா
அலங்காரக்கந்தனாகி ஆவணித் திங்கள்
திருவிழாக்கோலம் பூணும் வேலோனே
சலங்கை ஒலிக்க பக்திப் பாடல் பாட தேரோடும்
காட்சி முருகவேலோனே
படரும் துன்பங்கள் அகற்றி சுடரும்
பேரின்பங்கள் அளித்திடுவாய்
நல்லூர் வேலா!

**வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா, ஆத்தியடி**

# அமரர் தர்மலிங்கம் நினைவு தாவடியில்

*யாழ்ப்பாணம், செப். 3*

*தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 38 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று சனிக்கிழமை தாவடியிலுள்ள நினைவுத்தூபியில் இடம்பெற்றது.*

*பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் ஆ.சி. கணேசவேல் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.*

*'ஈழத்தமிழரின் சமகால அரசியல்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அரசறிவியல் துறைப் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆற்றினார்.*



*நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, வடமாகாணசபை அவைத்தலைவர் சி.வீ. கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தவிசாளர்கள், உறுப்பினர்கள், [illegible] பங்கேற்றனர். (ச-20)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித் தேர்தல்கள் விவகாரம்:

# வேட்புமனுக்களை இரத்துச்செய்ய நாடாளுமன்றத்துக்கே அதிகாரம்!

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 3**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்துள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் அதிகாரம் ஆணைக்குழுவுக்குக் கிடையாது. அதற்கு சகல கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடி, நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்வுகாணவேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.**


பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையான அரச நிர்வாகம் தொடர்பான நாடாளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழு கூடியபோது அவர் மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் இறுதிக்கட்டத்தில் நிதி விடுவிப்பு முடக்கப்பட்டதால் தேர்தல் வாக்கெடுப்பு எப்போது இடம்பெறும் என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இதனால் வேட்புமனுத்தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? எனத் தெரிவுக்குழுவின் உறுப்பினர் ரோஹண பண்டார கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு 3 ஆயிரம் அரச சேவையாளர்கள் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளார்கள். சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களுக்கு அரச நிர்வாக அமைச்சின் ஊடாகத் தற்காலிகத் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் செய்யும் அரச சேவையாளர் ஒருவர் தேர்தல் வாக்கெடுப்பு இடம்பெறும் வரை அரச சேவையில் ஈடுபடமுடியாது. தேர்தல் சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் எம்மால் செயற்பட முடியாது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் அதிகாரம் ஆணைக்குழுவுக்குக் கிடையாது. இதற்கு சகல கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்வுகாணவேண்டும்- என்றார். (ச-இ)



## சூரியனை ஆராய்வதற்கு சீறிப்பாய்ந்தது ஆதித்யா

புதுடில்லி, செப். 3

சூரியனில் ஆய்வுகளை நடத்துவதற்காக ஆதித்யா என்ற விண்கலத்தை நேற்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது இஸ்ரோ.

இந்தியாவின் முதல் சூரிய ஆய்வு விண்கலமான இது, சூரியனை ஆய்வு செய்ய நேற்று முற்பகல் 11:50 மணிக்கு பி.எஸ்.எல்.வி. சி-57 ரொக்கெட் மூலம் விண்ணுக்கு ஏவப்பட்டது.

இந்த விண்கலம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான பயணத் தூரத்தில் நூறில் ஒரு பங்கு தூரத்தில் நிலைநிறுத்தப்பட்டு ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கப்படவுள்ளன. அதாவது, ஆதித்யா விண்கலம், 127 நாள்களில் 15 இலட்சம் கிலோமீற்றர் பயணம் மேற்கொண்டு 'லெக்ரேஞ்சியன் 1' புள்ளியில் நிலைநிறுத்தப்படவுள்ளது. ஆதித்யா விண்கலம் நாள் ஒன்றுக்கு ஆயிரத்து 440 புகைப்படங்களை எடுத்தனுப்பும் திறன் கொண்டது. (ம)

## வவுனியா, முல்லைத்தீவில் இன்று மழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, செப். 3

வடக்கு மாகாணத்தில் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்று மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் சுமார் 100 மில்லிமீற்றர் அளவில் பலத்த மழை பெய்யக்கூடும். கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும். இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னலால் ஏற்படக்கூடிய ஆபத்தைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

## ராஜபக்சக்களுடன் மீண்டும் விமல், கம்மன்பில இணைவு?

### சமரசத் தூதுவராக மஹிந்த

கொழும்பு, செப். 3

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோரை தமது அணியில் இணைத்துக்கொள்ள வேண்டும் எனக் கட்சி தலைவரான மஹிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை விடுப்பதற்குப் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தயாராகிவருகின்றனர் எனத் தெரிய வருகின்றது. அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழொன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்சவால் மாத்திரமே இந்த இணைப்பை வெற்றிகரமாக செய்யமுடியும் எனவும், இதற்குத் தகுதியான ஒரே தலைவர் அவர் எனவும், இதற்குரிய நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை நடத்தியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

பெரமுனவுக்குள் புதிய தலைமைத்துவம் உருவாகி வருவதாலும், மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த அதிருப்தி நிலை குறைந்துவருகின்றது என்று அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதுவதாலும் கூட்டணியைப் பலப்படுத்த விமல், கம்மன்பில அவசியம் என எண்ணுகின்றனர்.

கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் அமைச்சரவையில் இருந்து விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் நீக்கப்பட்டிருந்தனர். கடந்த பொதுத்தேர்தலில் இவர்கள் மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தாலும் நாடாளுமன்றத்தில் தற்போது சுயாதீனமாகச் செயற்பட்டு வருகின்றனர். (எ-44)



## இந்தியாவிடம் இருந்து இறைச்சி இறக்குமதி!


### நாளை இறுதி முடிவு

கொழும்பு, செப். 3

இந்தியாவில் இருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்வது தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. கலந்துரையாடலின் பின்னர் இந்தியாவில் இருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியை 850 ரூபாவுக்கே நுகர்வோருக்கு வழங்க முடியும் எனவும், எனினும் தொழிற்றுறையினர் அந்தச் சலுகைகளை மக்களுக்கு வழங்குவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை- கோழி மற்றும் முட்டை உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட நிதியை மீளாய்வு செய்யுமாறு சுகாதார மற்றும் கால்நடை உற்பத்தித் திணைக்களத்துக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார். (ம)



## கெஹலிய மீதான பிரேரணை: எதிர்வரும் 8இல் வாக்கெடுப்பு

கொழும்பு, செப். 3

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் 6ஆம், 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியபோதே இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ராகேணதிர தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்திருந்தன.

அதற்கமைய நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் 8ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு பிரேரணை மீதான வாக்கெடுப்பை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவக் கற்கைகள் விண்ணப்பம் அனுப்பலாம்


யாழ்ப்பாணம், செப். 3

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் முகாமைத்துவக் கற்கைநெறிகளான கணக்கீடு மற்றும் நிதியியல் முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத் தள முகவரியில் பிரவேசித்து பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை 021 222 3374 என்ற தொலைபேசி யூடாகப் பெறலாம் என யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)



உரும்பிராய் கிழக்கு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் சமேத சிவமகேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச)

# தென்னை முக்கோண வலயம் வடக்கில் நேற்று ஆரம்பம்!



கொழும்பு, செப்.3

வடக்கு தென்னை முக்கோண வலய ஆரம்ப நிகழ்வும், சர்வதேச தென்னை விழாவும், தென்னை வளர்ப்பாளர்கள் கௌரவிப்பும் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி- பளை மாதிரி தென்னம் தோட்டப் பகுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் தென்னைச் செய்கையாளர்களுக்கு ஒரு ஏக்கர் தென்னைச் செய்கைக்கான தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. சிறந்த தென்னைச் செய்கையாளர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா காசோலைகளும் வழங்கப்பட்டன.

அடுத்த இரண்டு வருடங்களில் 3.5 மில்லியன் தென்னைகளை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண இதன்போது தெரிவித்தார். (எ-113)

## பப்பாசி, வாழை விலை எகிறியது

யாழ்ப்பாணம், செப். 3

யாழ். குடாநாட்டில் வாழைப்பழம் மற்றும் பப்பாசி பழங்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

தற்போதைய கடும் வறட்சியான காலநிலை காரணமாக அவற்றின் விலை அதிகரித்துள்ளன என்று பப்பாசி, வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். கதலி வாழைப்பழம் கிலோ 250 ரூபா வரையும் பப்பாசிப் பழம் கிலோ 220 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-17)



## மதிப்பளிப்பு

சாவகச்சேரி, செப்.3

வடக்கு மாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் பனை மானியங்கள் தொடர்பாக சிறப்பாக சேவையாற்றிவர்கள் அண்மையில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் மதிப்பளிக்கப்பட்டனர்.

தென்மராட்சி பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் தலைவராகப் பணிசெய்தமைக்காக க.துரைசிங்கம் என்பவருக்குப் பொன்னாடை போர்த்தி கேடயம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (எ-9)

## பதவி உயர்வு

சாவகச்சேரி, செப்.3

வடக்கு மாகாண சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் முதலாம் தரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாகக் கடமையாற்றிய பத்துப் பேர் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாகப் பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் வெற்றிடமாகக் காணப்பட்ட இடங்களுக்குப் பதவியுயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (எ-9)

# நல்லூர் அன்னதான மடங்களில் சுகாதாரப் பிரிவு கண்காணிப்பு

யாழ்ப்பாணம், செப். 3

நல்லூர் சுற்றாடலிலுள்ள அன்னதானம் வழங்கும் மடங்கள் தினமும் யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. நல்லூர் ஆலயத்திலுள்ள அன்னதான மடங்களில் அதிகளவிலான பக்தர்கள் நாள்தோறும் பங்கேற்கின்றனர். அதனால் அங்கு சுகாதார வசதிகள், குளோரின் இடப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கல், சமையல் செய்யும் இடங்கள் ஆகியவற்றில் சுகாதாரம் பேணப்படுகின்றனவா? எனத் தினமும் பரிசோதிக்கப்படுகின்றது என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-270)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தெய்வ வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். செலவு செய்ய நேரிடும்.

**தனுசு:** மனதில் இனம்தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். வீண்மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லாதிக்கப் பலிக்கடா!

இலங்கைக்கு இரண்டு நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தன் பயணத்துக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த நேரத்துக்கு சில மணித்தியாலங்களுக்கு முன்பாக அந்தப் பயணத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதாக அறிவித்திருக்கின்றார். சர்வதேச ராஜதந்திரிகளின் சந்திப்பும் பயண ஒழுங்குகளும் அவ்வளவு இவ்வாறு இலகுவில் பின்வாங்கப்படுவதோ – கைவிடப்படுவதோ இல்லை. இவ்வாறிருக்கையில், அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இந்த முடிவு ஓர் அரிதான சம்பவமே. 'தவிர்க்க முடியாத காரணங்களால் பயணம் கைவிடப்படுகின்றது' என 'தூதரகப் மொழியில்' இதற்கு நியாயம் கற்பிக்கப்பட்டாலும், இதன் பின்னாலுள்ள அம்சங்கள் மிகவும் வலியதும், ஆபத்தும் மிக்கன.

சீன ஆய்வுக் கப்பலொன்று இலங்கைக்குள் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக நகர்ந்து கொண்டிருக்கின்றது. தென்சீனக் கடற்பிராந்தியங்களில், கடலின் நீரோட்டத்தையும் அதற்கேற்ற போரியல் தரத்தையும் சீனா மேம்படுத்தி வைத்திருந்து இன்று அமெரிக்காவுக்குச் சவால் விடுகின்றது என்றால், அதற்கு இத்தகைய கப்பல்கள் மேற்கொண்ட கடலியல் ஆய்வு நடவடிக்கைகள்தான் முதன்மைக் காரணம். ஆதலால், இலங்கைக் கடற்பரப்பில் இவ்வாறான ஆய்வுகளை சீனா முன்னெடுத்தால் அது தன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று இந்தியா கருதுகின்றது. இதனால்தான் சீனக் கப்பலின் வருகைக்கு ஆரம்பத்திலிருந்தே இந்தியா கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்தது. இந்தியாவைக் கையாள முடியாத நிலையில், இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு 'சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்கப்பட்டாயிற்று' என்றும், வெளிவிவகார அமைச்சு, 'சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்கவில்லை' என்றும் முன்பின் முரணான பதில்களை வழங்கி இந்தியாவின் காதில் பூச்சுற்ற எத்தனித்தன. இவ்வாறான தொரு இருண்மைநிலைதான் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தன் இலங்கைக்கான பயணத்தைக் கைவிடக்காரணமாகியிருக்கின்றது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சரை வரவேற்று – கலந்துரையாடி – வழக்கம்போன்ற வெற்று வாக்குறுதிகளை வழங்கி பத்திரமாக அனுப்பிவைத்துவிட்டு, அதன் பின்னர் சீனக் கப்பல் விவகாரத்தைக் கையாளலாம் என்று இலங்கை போட்டிருந்த 'விலாங்குமீன் கணக்கு' இப்போது தப்புக் கணக்காக ஆகியிருக்கின்றது. ஆக, மதில்மேல் பூனையாக நிற்காமல் ஒன்றில் இந்தப்பக்கம் அல்லது அந்தப் பக்கம் பாய்ந்தே ஆகவேண்டும் என்ற நிலையை இப்போது ஏற்படுத்தியிருக்கின்றது பாரதம். இதில் எந்தப் பக்கம் பாய்ந்தாலும் காயமடைந்தே ஆகவேண்டும் என்ற நிலை கொழும்புக்கு.


சீனத்தின் பக்கமாகப் பாய்ந்தால், பாதுகாப்புக் காரணங்களை முன்னிலைப்படுத்தி இலங்கையை இந்தியா பகைக்கும். நாணய நிதியத்தைவிடவும் மேலான (பயன்மிக்க) கடனுதவிகளை இந்தியா இலங்கைக்குச் செய்திருக்கின்றது. அதை மறுசீரமைக்கவும் தயாராகியிருக்கின்றது. ஆனால், சீனமோ கடன் மறுசீரமைப்பின்தன் இரும்புப்பிடியை இளக்குவதாயில்லை. இவ்வாறிருக்கையில் இந்தியாவும் கடன் மறுசீரமைப்புகளில் கடுமை காட்டினால் அது இலங்கையை மீண்டெழ முடியாத பொருளாதார நலிவு நிலைக்குள் இட்டுச்செல்லும். இதைவிட கடந்த வருடம் ஏற்பட்ட பொருளாதாரப் பேரழிவின் பின்னரான உட்கட்டமைப்பு முதலீடுகளில் பெரும்பாலானவை இந்தியாவைச் சார்ந்ததாகத்தான் இருக்கின்றன. இந்தியாவின் இந்த உதவிகளை சீனத்திடம் எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில், சீனம் ஒரு வர்த்தகப் பூதம். அதற்கு விழுங்க மட்டும்தான் தெரியும்.

மாறாக, கொழும்பு இந்தியாவின் பக்கமாகப் பாய்ந்தால், போர்க்குற்ற விசாரணைகள் இலங்கைக்கு முன்பாக பூதாகரமாக நீளும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு ஓர் அரணாக இப்போது சீனாவே செயற்படுகின்றது. சீனத்தின் வீட்டோ அதிகாரம்தான் ஐ.நா.வில் இலங்கையின் இதயத் துடிப்பு நிலைக்கக் காரணம். அதிலும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடருக்கு இன்னும் சில நாள்களே எஞ்சியுள்ள நிலையில், இலங்கை இத்தகையதொரு விஷப் பரீட்சையைச் செய்ய விரும்பாது. ஆனால், ஒன்றுமட்டும் உண்மை; இலங்கையின் விலாங்குமீன் போக்குக்கு ஆயுள் மிகக்குறைவு. ஏதோவொரு வல்லாதிக்கம் இந்த நாட்டை முற்றாகப் பகைக்கத்தான் போகின்றது. அப்போது அதன் தாக்கம் அப்பாவிப் பொதுமக்களையே வதைத்தெறியும்.

**நாளொரு நல்வார்த்தை**

வெற்றி கிடைக்குமோ என்ற அச்சம், கண்டிப்பாகத் தோல்வியை நோக்கியே கொண்டு செல்லும்.

– நெப்போலியன்




# மாதாந்தம் புதிதாக 1,200 புற்றுநோயாளர்

கொழும்பு, செப். 3

**மஹரகம அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனையில் மாதந்தோறும் 950 முதல் ஆயிரத்து 200 வரையான நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றனர் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மாத்திரமல்லாது உலகளாவிய ரீதியில் புற்றுநோய் தாக்கத்துக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. உணவு, சுற்றுச்சூழல் பாதிப்புகள், மது அருந்துதல், புகைப்பிடித்தல், மனஉளைச்சல் ஆகியவை இதற்குப் பிரதான காரணங்களாகின்றன. குழந்தைப் பருவ புற்றுநோயாளிகளில் 75 முதல் 80 வீதமானவர்களை முழுமையாகக் குணப்படுத்தமுடியும்.

அத்துடன் புற்றுநோயை முதலில் கண்டறிந்த உடனேயே சிகிச்சையளிக்க ஆரம்பிப்பின் முழுமையாகக் குணப்படுத்த முடியும். மாதந்தோறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மருத்துவத்தேவையும் உயர்வடைந்துள்ளது. ஆகவே நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்குரிய மருந்துகளை நன்கொடையளிக்க விரும்புவோர் மருத்துவமனையுடன் தொடர்பு கொள்ளலாம்- என்றார். (ச)

## சுதந்திரக் கட்சிக்குள் பிரச்சினை இல்லை

### மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, செப். 3

சுதந்திரக் கட்சிக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லை. அனைவரும் சகோதரர்கள் போன்று செயற்பட்டு வருகின்றோம் என்று கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலத் தவறுகளைச் சரிசெய்துகொண்டு முன்னோக்கிச் செல்ல அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்க நான்தயார். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தற்போது குழப்பம் இல்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் பொதுவேட்பாளராகக் களமிறங்குவதற்கான சாத்தியம் உள்ளது. அதற்கான அழைப்பு விடுக்கப்பட்டால் நிச்சயம் ஏற்பேன் - என்றார். (ச-44)

## சபுகஸ்கந்தவில் திருத்த வேலை!

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பெற்றோல் உற்பத்தி அலகு திருத்த வேலைகளுக்காக இடைநிறுத்தப்படவுள்ளது என்று வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் 18ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 8ஆம் திகதி வரையில் இந்தத் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. குறித்த காலப் பகுதிக்கு அவசியமான எரிபொருள் கையிருப்பிலுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (ச-இ)

**நாளை**

04.09.2023
திங்கட்கிழமை
ஆவணி 18

சுபநேரம் : 12.05 – 01.35
ராகுகாலம் : 07.35 – 09.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1. புலோலி, இந்து கௌரவகுலம் (V), 1991, பரணி, PhD, New zealand Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. Vegetarian விரும்பத்தக்கது. பதிவெண் - 30241
2. யாழ்ப்பாணம், றோமன் கத்தோலிக்கம், குருகுலம், 1989, மூலம், Master Degree, Engineer, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 30117
3. வடலியடைப்பு - மாவிட்டபுரம், இந்து கௌரவகுலம் (V), 1990, விசாகம், BSc, MBA, Consultant ஆக இருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 30243
4. யாழ்ப்பாணம் Town - கொக்குவில், இந்து கௌரவ குலம் (V), 1988, அனுஷம் MBBS (Jaffna) Doctor மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27295
5. கொக்குவில் - கந்தர்மடம், இந்து கௌரவகுலம் (V), 1992, புனர்பூசம், Bachelors of Computer System Engineer, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 30098
6. காரைநகர், இந்து கௌரவகுலம் (V), 1986, சித்திரை, BSc in Information and Communication Technology, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27042
7. கோப்பாய் - சுன்னாகம், இந்து கௌரவகுலம் (V), 1988, பூரட்டாதி, MBA, Financial Analyst, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 26746
8. சண்டிலிப்பாய் - தெல்லிப்பழை, இந்து கௌரவகுலம் (V), 1989, அனுஷம், B.S and Post Graduate, Human Resource Analyst ஆக இருக்கும் USA Citizen மண மகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 26598
9. கரவெட்டி, இந்து கௌரவகுலம் (V), 1986, திருவோணம், BA (Hons) Accounting and Finance, CIMA, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 26504

**Phone - 077 539 3728**
**Whatsapp - 077 803 8193**

51897(A)AI

## மணமகள் தேவை

1. பருத்தித்துறை, இந்து கௌரவகுலம் (V), 1991, புனர்பூசம், MBBS Doctor மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33737
2. சுழிபுரம் - அராலி, இந்து கௌரவகுலம் (V), 1987, அச்சுவினி, Quantity Surveyor, Nigeria Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33612
3. புங்குடுதீவு, இந்து கௌரவகுலம் (V), 1987, அனுசம், Masters of Software Engineering, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33498
4. திருநெல்வேலி - சாவகச்சேரி, இந்து கௌரவகுலம் (V), 1987, ஆயிலியம், MBBS Doctor மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34953
5. நல்லூர் - அளவெட்டி, இந்து கௌரவகுலம் (V), 1981, திருவாதிரை, Graduate, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27961
6. பருத்தித்துறை - அச்சுவேலி, இந்துகௌரவகுலம் (V), 1991, சதயம், Graduate Quantity Surveyor மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27903
7. புலோலி, இந்து கௌரவகுலம் (V), 1990, ரோகினி, BBM Finance & MBA, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27898
8. மிருசுவில், இந்து கௌரவகுலம் (V), 1988, திருவோணம், BSc in information Technology, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32307
9. சாவகச்சேரி - வேலணை, இந்து கௌரவகுலம் (V), 1990, திருவோணம், BBM, B.Eng, (University of Sunderlan), German Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31102
10. கோப்பாய் - மல்லாகம், இந்து கௌரவகுலம் (V), 1982, சுவாதி, MBBS Doctor, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31058

(CS/51897)AH-1

தொடர்புகளுக்கு- **S.Sharma J.P** **Phone - 077 539 3728**
**www.thaalee.com** **Whatsapp - 077 803 8193**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுலம் (V) ஆண் கார்த்திகை 3 ஆம் பாதம் கிரகபாவம் 36 உயரம் 5'6"பிறப்பு 1995 Oct சொப்வேயர் இஞ்சினியருக்கு எத்துறையிலும் படித்த, படித்துக்கொண்டிருக்கின்ற, தொழில்புரிகின்ற மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 316 4037**

## வேலையாள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் நிறுவனத்திற்கு கணக்காளர் தேவை
(ஆண்/ பெண்)
கணினி அனுபவம் உள்ள வர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : **070 640 6905**

## தேவை

கிளிநொச்சியிலுள்ள பிரபல புடைவைக்கடை ஒன்றிற்கு நிறுவனத்தினைக் கொண்டு நடத்தக்கூடிய முகாமையாளர் தேவை.

(cs 51900) (N-1)

**077 563 2734, 077 452 3408**

## கடை களஞ்சியம் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 2 மாடி வியாபார கட்டடம் தங்குமிட குளியலறை வசதிகளுடன் விற்பனைக்கு 55 வருடங்களுக்கு மேலான தோம்பு தூய உறுதி.

**077 728 0826**


medicare
PLATINUM SPONSOR
PFIRC

# பிரசாந்த்

குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

No.77, Harrington Road,
Chetpet, Chennai – 600 031,
Tamilnadu, India.

INTERNATIONAL ACCREDITED CLINIC




medicare

## இலவச மருத்துவக் கண்காட்சி!

**8th, 9th, 10th**
**SEPTEMBER 2023**

**VEERASINGHAM HALL, JAFFNA**

**Stall No. L1**

பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவரை நேரில் சந்தித்து உங்களது குழந்தையின்மைப் பிரச்சினைகள் பற்றிய இலவச ஆலோசனைகளைப் பெறலாம்

35 years MEDICARE FOR WOMEN


**25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தம்பதியரின் குழந்தைக் கனவுகளை நனவாக்கி வரும் மருத்துவமனை**

விபரங்களுக்கு: **0760155883**

# பிரசாந்த்

மருத்துவமனை தகவல் மையம்
ரோயல் மருத்துவமனை
62, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
infopfrcsl@gmail.com www.pfrcivf.lk

**குழந்தையின்மைக்கான அதிநவீன சிகிச்சைகளுக்கு சிறப்புச் சலுகைகள்!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயலொக்கின் Karuna.lk சேவைக்கு 'பயன்மிகு சிறந்த தொழில்நுட்பம்' விருது

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. மூலம் இயங்குகின்ற Karuna.lk சேவையானது தொழில்நுட்பத்தை நற்செயல்களுக்காக பயன்படுத்துவதற்கான அதன் ஒப்புவமையில்லா தகைமையை அங்கீகரிக்கும் வகையில், SLASSCOM தேசிய திறன்சார் தேசிய விருதுகள் 2023இல் 'நற்செயல்களுக்கான சிறந்த மென்பொருள் கண்டுபிடிப்பு அல்லது புத்தாக்கம்' என்பதற்கான தேசிய விருதைப் பெற்றது. அதற்கமைய, Karuna.lk இலங்கையின் முதல் கிரவுட் (வ்) பண்டிங் தளமானது, சமூகத்தில் நற்தாக்கத்தை விளைவிக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் அதன் குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்காக அங்கீகரிக்கப்பட்டது. தேவைகள் உடையோருடன் நன்கொடையாளர்களை இணைக்கும், இந்த தளமானது உரிய நேரத்தில் மற்றும் பொருத்தமான முறையில், உயர்மட்ட நிர்வாகத்தில் இயங்கும் நம்பகமான மற்றும் பாதுகாப்பான நிதி திரட்டும் இயந்திரத்தின் ஆதரவுடன் சமூக பொறுப்பின் மூலம் இலங்கையர்களின் வாழ்வை வலுவூட்டுவதையும் வளப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒக்டோபர் 2022ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து, இந்தத் தளமானது 107 தொண்டு நிறுவனங்களால் 116 முன்னெடுப்புகளை ஆதரித்துள்ளது. அவற்றில் 30 வீதமானவை சுகாதாரப் பாதுகாப்புடனும், 30 வீதமானவை கல்வியை மேம்படுத்துதலுடனும் தொடர்புடையன. சுகாதாரம், சமூகம், கல்வி, அவசரநிலை, சுற்றுச்சூழல், விளையாட்டு, புற்றுநோய், விலங்குகள் உள்ளிட்ட பல்வேறு வகையான சமூக காரணங்களுக்கான அணுகலுடன், நன்கொடையாளர்கள் பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கல்களை வழிநடத்துவதன் மூலம் முழுமையான வெளிப்படைத்தன்மையை இந்த தளம் உறுதி செய்கிறது. மேலும் Karuna.lk தளமானது அதன் அணுகல்தன்மை, வசதி, வெளிப்படைத்தன்மை, தன்னார்வத் தொண்டு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கான பாராட்டைப் பெற்றுள்ளது.

Karuna.lk இன் தாக்கத்தை அங்கீகரித்து இந்த மதிப்புமிக்க சிறந்த புத்தாக்க மென்பொருள் தொழில்நுட்ப விருதுகளைப் பெறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்' என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனத்தின் இடர் மற்றும் இணக்க குழுமத் தலைவர் அசங்க பிரியதர்ஷன தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், Karuna.lk ஐ ஏற்றுக்கொண்ட நன்கொடையாளர்கள் மற்றும் நிறுவனங்க ளின் தாரள சமூகத்துக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், மற்றும் எங்கள் சமூகத்தில் நல்லவிதமான மாற்றத்தை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்க முடிந்துள்ளதையிட்டு பெருமைப்படுகின்றோம்.

இந்த கிரவுட் (வ்)பண்டிங் தளமானது ஒத்துழைப்பு மற்றும் கண்டுபிடிப்புகளின் சக்தியை வெளிப்படுத்துகிறது. மேலும் சமூக நன்மைக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் எங்கள் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது' என்றார். 'டயலொக்கின் Karuna.lk இயங்குதளமானது சமூக நலனுக்காக தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பை உண்மையாகவே நிரூபித்துள்ளது. மேலும் SLASSCOM தேசிய விருதுகள் 2023 இல் தேசிய 'நற்செயல்களுக்கான சிறந்த மென்பொருள் கண்டுபிடிப்பு அல்லது புத்தாக்கம்' என Karuna.lk அங்கீகரிக்கப்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். சமூகத்தில் நற்தாக்கத்தை விளைவிக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் தளத்தின் விதிவிலக்கான பங்களிப்பு, உதவிக்கரம் வேண்டி நிற்போருடன் நன்கொடையாளர்களை இணைப்பது மற்றும் பல முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது போன்றவற்றிற்கான அங்கீகாரமாக இது பிரதிபலிக்கின்றது' என SLASSCOM தலைவர் ஆஷிக் எம். அலி தெரிவித்தார். SLASSCOM தேசிய விருதுகள் 2023 சமூக சவால்களை எதிர்கொள்ளத்தக்க மற்றும் நிலைபேறான வளர்ச்சியை ஊக்குவிக்கத்தக்க சிறந்த தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை வரவேற்கின்றது மற்றும் அங்கீகரிக்கின்றது.

டயலொக்கின் Karuna.lk இயங்குதளத்துக்கான இந்த அங்கீகாரமானது, இலங்கையர்களின் வாழ்க்கையையும் நிறுவனங்களையும் வலுவூட்டல் மற்றும் வளப்படுத்துவது என்ற அதன் நோக்கத்தில் பிரதிபலிக்கும் வகையில், சமூக நலனை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்துவதில் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.




படத்தில் இடமிருந்து வலமாக: டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. குழும நிலைபேற்றுத்தன்மை உதவி முகாமையாளர் ஐங்கரராஜ் ஜெயராஜசிங்கம், டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. இடர் மற்றும் இணக்க குழுமத் தலைவர் அசங்க பிரியதர்ஷன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி வர்த்தக நாமம் மற்றும் ஊடக பிரிவின் உதவி வர்த்தக நாம முகாமையாளர் சுயந்தி ரம்புக்வெல, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. ஐடியா மார்ட்டின் சிரேஷ்ட பிரதிநிதி பசிந்து டி சில்வா.


## உலகை ஆளும் ஊடகத்துறைக்குள் நீங்களும் பிரவேசிக்க விருப்பமா?




பயிற்சிகள் யாவும் இலவசமாகவே நடத்தப்படும்

### உதயன் ஊடகப் பயிற்சி - 2023

- உங்கள் ஒவ்வொருவரையும் பட்டைதீட்டி ஊடகத்துறையில் மிளிரச்செய்வதற்கு "உதயன்" தயாராகின்றான்.
- உதயனின் இந்தப் பயணத்துடன் கைகோர்க்க உங்களுக்கு விருப்பமா?
- அச்சு, இலத்திரனியல் ஊடகத்துறையின் அடிப்படைகள் மூத்த ஊடகர்கள், பல்கலை விரிவுரையாளர்களால் போதிக்கப்படும்.
- ஒரு மாத காலம் பயிற்சி மற்றும் ஊடகப்பணி தொடர்பான அனுபவங்களைப்பெற முடியும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும் மற்றும் பயிற்சி முடிவில் திறமையானவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.
- 18 - 30 வயதுக்கு இடைப்பட்ட இரு பாலரும் விண்ணப்பிக்க முடியும்.
- பயிற்சிகள் யாவும் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் தலைமை அலுவலகத்தில் வார நாட்களில் நடைபெறும்.

உங்கள் சுயவிவரக் கோவையை 10.09.2023 இற்கு முன்னர் 0767374444 என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அல்லது digital@uthayan.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 070 7013 060

## தோட்டக் காணி விற்பனைக்கு

புத்தூர் நவற்கிரி வீதியில் நவற்கிரியில் 46 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

077 706 6487

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரப்பகுதியில் சகல வசதிகளுடன் கூடியவீடு உடன் வாடகைக்கு உண்டு.

077 071 3048

## வாடகைக்கு

206/2, ஸ்ரான்லி றோட்டில் அமைந்துள்ள 2400 சதுர அடி கொண்ட கட்டடம் வாடகைக்கு விடப்படும்.
(CDB வங்கிக்கு மேல் உள்ளது)

077 360 9005

## வேலைவாய்ப்பு அறிவித்தல்

Hutch 4G தொழில் நுட்பத்தை நாடெங்கும் அறிமுகப்படுத்தி யாழில் சிறந்த 4G சேவையை வழங்கிவரும் எமது நிறுனம் மேலும் சந்தைப்படுத்தலில் மெருகூட்டும் வகையில் புதிய பிரதான விநியோகஸ்தருடன் எமது சேவையை ஆரம்பித்துள்ளோம். அதற்கமைய

1. புதிதாக யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட இருக்கும் எமது அலுவலகத்திற்கு வாடிக்கையாளர்கள் சேவை உத்தியோகத்தர் வெற்றிடம் காணப்படுகிறது முன் அனுபவம் விரும்பத்தக்கது.

2. DSR வெற்றிடம் மாதாந்தம் 65000/- க்கு மேல் ஊதியம் பெறக்கூடிய விற்பனைப் பிரதி நிதி வெற்றிடம் காணப்படுகிறது. இதற்கு கல்வி அறிவு O/L அறிவு மற்றும் விற்பனைத்துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் அனைவருக்கும் சம்பளத்துடனான பயிற்சி காலத்தின் பின் மேற்படி ஊதியம் பெறலாம். இத்தொழிலில் விற்பனை பிரதிநிதி வாய்ப்புக்கு Motor Bike மற்றும் சாரதி அனுமதி பத்திரம் என்பன அவசியம் ஆகும்.

தொடர்புகளுக்கு

**முகாமையாளர் - விமலதாஸ் கவிச்செல்வன்**
**078 500 0580**

**பிரதான விநியோகஸ்தர் T. சுலோஜன்**
Tishi Communication
**077 777 0125**

(cr.51936) (N.1)

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை
### உப அலுவலகம், உடுவில்.
### வட்டாரம் -9 தாவடி மானிப்பாய் வீதி, ஆதன இல 118

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-9 தாவடி மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள 118ம் இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் திருமதி கமலவேனி யோகேஸ்வரன் எனும் பெயரில் உள்ளது.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி தற்காலம் வலிகாமம் தெற்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று தாவடியிறையில் அமைந்துள்ள "உரலைப்புலம்" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு.3 குளி06.60 உம் வீடும் கிணறும் பயிர்வகைகளும் உடைய இந்த ஆதனமானது சொக்கநாதன் யோகேஸ்வரனும் பெண் கமலவேனியும் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு எஸ். சிவபாதம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2903ம் இலக்க 28.12.2006ந் திகதி வெளிப்படுத்துகை உறுதியில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் 1984ம் ஆண்டு மார்ச் மாதம் 18ந் திகதி பிரசித்த நொத்தாரிசு என்.முத்துவிநாயகம் முன்னிலையில் இலக்கம் 2278ல் எங்களில் 2ம் பேரில் நிறைவேறிய சீதன உறுதிப்படி எங்களின் சொந்தமும் ஆட்சியுமானதும் இதன் பின் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுவதுமான ஆதனத்தையும் அதில் அமைந்துள்ள வீட்டையும் எங்களில் 2ம் பேரின் மாதா காலஞ்சென்ற அருளம்பலம் பெண் இரத்தினபூபதி 1955ம் ஆண்டில் இருந்தே ஆட்சியில் இருந்து வந்துள்ளாரென்றும் அவ இறக்க அவவின் மகளாகிய எங்களில் 2ம் பேருக்கு சீதனமாகக் கொடுக்கப்பட்டுள்ளதென்றும் நாங்களும் 1984ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியான ஆட்சியில் இருந்து வருகின்றோம் என்றும் எங்களின் தொடர்ச்சியான ஆட்சியும் சொந்தமும் ஆனதென்றும் சொக்கநாதன் யோகேஸ்வரனும் பெண் கமலவேனியும் குறித்த வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பஞ்சாட்சரம் அவர்களால் 12.03.2006 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 3712 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 3குளி 06.60உம் அதற்குரியவைகளும் இதற்தெற்கெல்லைகளாக

**கிழக்கு :-** மதிமுகராஜா பெண் விஜயலட்சுமிக்கும் தர்மலிங்கம் பெண் பரமேஸ்வரிக்கும் உரிய ஆதனங்களும்.

**வடக்கு :-** கெங்காதரன் பெண் மனோன்மணிக்குரிய ஆதனமும்

**தெற்கு :-** தாவடி மானிப்பாய் வீதியும்

**மேற்கு :-** கையொழுங்கை

எனவே மேற்குறித்த ஆதனத்தினை செல்லத்துரை தனுஷன் பெண் தரங்கினி தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ, உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது செல்லத்துரை தனுஷன் பெண் தரங்கினி எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி சாரதா உருத்திரசாம்பவன்**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்குபிரதேச சபை**
**தவிசாளர்.**

**2023.07.21** (CS/51923)AH-1

## அண்ணாலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண கலாசார மண்டபம்

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, கிறிஸ்தவ பதிவுத்திருமணங்கள், முஸ்லீம் நிக்கா (திருமணங்கள்) மேலும் வைபவங்கள் செய்ய அண்ணாமலையானை நாடுங்கள்.
ஒன்பது மணிமுதல் 5 மணிவரை மண்டபத்தை பார்வையிடலாம்

**No.: 542, K.K.S, Road, Jaffna.**
**021 222 1355, 021 222 1356**

### கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் (A9 வீதி)
### பகிரங்க ஏலம் விடுதல்
### ஆலய வயற்காணி குத்தகைக்கு விடுதல்
### காலபோகம் 2023/2024

எமது கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான 20 1/4 (இருபதேகால் ஏக்கர) வயல் காணிகள் எதிர்வரும் 17.09.2023 ம் திகதி மு.ப 10.00 மணியிற்கு (ஞாயிற்றுக்கிழமை) ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

1. மருதநகர் 2 1/4 ஏக்கர்
2. பெரியபரந்தன் D/6 8 ஏக்கர்
3. பெரியபரந்தன் LB2/ D/5 10 ஏக்கர்

**குறிப்பு**

I. ஏலம் எடுப்பவர்கள் அன்றைய தினம் பி.ப 1.00 மணியளவிற்கு முன் முழுப்பணத்தையும் செலுத்த வேண்டும். தவறின் அடுத்ததாகவுள்ள விவசாயிற்கு காணி வழங்கப்படும்.
II. ஒரு ஏக்கருக்கு ஏலம் கூறி முழு வயல் குத்தகை பெறுமதி கணிக்கப்படும்.
III. காசோலைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.
IV. சகல விவசாயிகளின் நேர காலத்தை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்கு மு.ப 10.00 மணியிற்கு ஏலம் கூறப்படும்

**ஆலய பரிபாலனசபை சார்பில்**

| | | |
|---|---|---|
| ச.ஸ்ரீகௌரிபாலா | மா.சிவராசா | சு.வரதராசா |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர். |
| 077-6027147 | 077-5407448 | 077-9167716 |

## மென்பொருள் கற்கை விண்ணப்பம் கோரல்

யாழ். செப். 3

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் 'மென்பொருள் இளங்கலைமாணி' கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் www.ou.ac.lk என்ற இணையவழியூடாகவிண்ணப்பத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தகவல்களையாழ்.பிராந்திய நிலையத்திடமோ அல்லது 021 222 3374 என்ற இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

Daniel CONSULTANCY

## Vacancy

### Junior Accounts Associates – Jaffna Branch

Daniel Consultancy is an accountancy firm in the United Kingdom. We operate offices in Sri Lanka to support the parent company in London. We are looking for enthusiastic and dynamic individuals who can be part of our success team in Sri Lanka.

Along with the Colombo office, we are expanding our offices in Jaffna. This position is for individuals who are based in Jaffna.

**Main Responsibilities**

- Day-to-day bookkeeping in cloud-based accounting software.
- Month end reconciliations.
- Handling of accounts payable and receivable.
- Preparation of VAT and CIS returns for senior review.
- Preparation of management Accounts
- Assisting with the review of accounting records and raising issues to relevant senior.
- Assisting with year end accounts preparation.
- Pro active in delivering the assigned tasks and keep up the good level of communication.

**Who You Are?**

- Part qualified in AAT, ACCA, CIMA, or other professional qualifications.
- 1-2 years' experience working in UK based accounting practice preferrable but not essential.
- Interested in a career in accounting.
- Highly organised individual with time management skills.
- Excellent attention to detail.
- Good command in English.
- Ability to work well in a team and individually and under pressure.
- Solid IT skills and fast learner.

**Salary**

At Daniel Consultancy, we offer an attractive remuneration package and other range of benefits such as annual bonus schemes.

**Working Hours**

Monday to Friday, 9.00 AM to 6.00 PM. Half a day working on Saturdays – Roster 1
Monday to Friday, 12 PM to 9 PM. First and last Saturdays of the month – Roster 2

**If you are interested and looking for more than just a job, then look no further. To apply please email your resume and expected salary to info@danielconsultancy.co.uk.**

(ச 51903) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் வெற்றிடங்கள் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப். 3

தென்மராட்சி கல்வி வலயத்தில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு தரம் - II, III ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை, மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம், கரம்பகம் அ.த.க. பாடசாலை, குடமியன் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக 'வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (ச)

## திறந்த பல்கலையால் விண்ணப்பம் கோரல்

யாழ், செப். 3

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் தமிழ் மற்றும் தமிழ் மொழி கற்பித்தலில் சிறப்பு கலைமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்போர் விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்துஎதிர்வரும் 15ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்.

மேலதிகவிவரங்களை 021 222 3374 என்ற தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு பெறலாம் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)


### காணி விற்பனைக்கு
நீர்வேலி இராச வீதியிலிருந்து 100 M தூரத்திற்குள் அரசகேசரிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 622 4206

### கடை வாடகைக்கு
இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு. இல. 182/1, யாழ். நகர், ஸ்ரான்லி றோட், வெலிங்டன் சந்தி
தொடர்பு : 077 6589 694

### கதிரை விற்பனைக்கு
உணவு விடுதிகளுக்கு ஏற்ற மரக்கதிரைகள் விற்பனைக்குண்டு.
077 798 3933

### வீடு வாடகைக்கு
யாழ். மாநகரசபை நிர்வாக எல்லைக்குட்பட்டதும், கச்சேரி, யாழ். பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு மிகக் கிட்டிய தூரத்திலும் 3 அறைகள் 2 இணைந்த குளியலறைகள், வெளிப்புற குளியலறை மற்றும் வாகனங்கள் நிறுத்தக்கூடிய முற்றத்துடன் வீடு வாடகைக்கு உண்டு.
076 113 1204
(CS/25024)AH-1

### உடனடித் தேவை
நோயாளியின் பாவனைக்கு தலை, கால் உயர்த்தக் கூடிய கட்டில் (ICU Bed) விற்பனைக்கு / வாடகைக்கு வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
076 803 5188
(CS/51944)

### பணியாளர்கள் தேவை
பருத்தித்துறை வீதி, நீர்வேலியில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.
I. விற்பனைப் பிரதிநிதி } ஆண்
II. விற்பனை விநியோகம் செய்பவர் } ஆண்
III. கணினி செயற்படுத்துனர் (ஆண் / பெண்)
077 789 0398, 021 223 0235
(cs-51913) N.1 3x4

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில் A9 வீதியில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இல:
076 8799 421

### Apartment For Sale
2 Bedroom,3Bedrooms, Apartment உடனடி விற்பனைக்கு 830 ft, 1150 sqft, இலகு தவணை கட்டணை முறையில் செலுத்தலாம்.
தொடர்பு : 076 0589822

### வேலையாட்கள் தேவை
யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள விடுதிக்கு கீழ்காணும் வேலையாட்கள் தேவை
* Manager
* Cleaner
* Security (Night)
* சமையல்காரர்
* வரவேற்பாளர் (கணினி அறிவுடையவராக இருத்தல் வேண்டும்)
SAI Holiday Inn, No.132, Kachcheri Nallur Road, Jaffna.
எனும் முகவரிக்கு 06.09.2023 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.

### மணமகள் தேவை
யாழ். Non RC மதம், வயது 39, கொழும்பில் வசிக்கும் வியாபாரம் செய்யும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை. Hindu, RC மதம் தொடர்பு கொள்ளலாம்.
076 041 0334
(CS/25022)AH-1

### மணமகன் தேவை
யாழ். இந்து கௌரவகுடும்பம் (V). 27 வயது, வெளிநாட்டு பட்டதாரி, அத்தம், கன்னிராசி, உதயத்துச் செவ்வாய் உடைய, கொழும்பில் Executive ஆக பணிபுரியும் மணமகளுக்கு Professional Qualification மணமகனை எதிர்பார்க்கின்றனர்.
075 226 9721
(CS 258)50

### வீடு விற்பனைக்கு
(திருநெல்வேலி)
1 1/2 பரப்புக் காணி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து 150 மீற்றர் தூரம்.
தொடர்பு:
077 632 3041, 077 104 8865
(CS 26261)A-1

### தொடர்மாடி வீடு விற்பனைக்கு
வெள்ளவத்தை Land Side இல் 1000 சதுர அடியில் 3 படுக்கை அறை மற்றும் 2 குளியலறை கொண்ட தொடர்மாடி வீடு விற்பனைக்குண்டு. வீட்டு உறுதிப்பத்திரம் உண்டு. வங்கிக் கடன் முழுத் தொகையில் 30% ஒழுங்கு செய்து தரப்படும். (HNB அல்லது Commercial) தயவு செய்து உண்மையாக வாங்குபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
070 148 3348
(CS/25023)AH-1

### யாழ்ப்பாணம் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு
யாழ் சுண்டுக்குளி சோமசுந்தரம் லேனில் 1 1/2 பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
077 - 6273917
FORESIGHT'S


### இலவச Taxi Meter
நீங்கள் உங்கள் வாகனங்களுக்கு PickMe Taxi meter இல் இணைக்க அழைக்கவும். (முச்சக்கர வண்டி / CAR/ VAN / மோட்டார் சைக்கிள்)
077 473 7737
(CS/51946) AH-1

### வேலை வாய்ப்பு
கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு தச்சு வேலை தெரிந்தவர்கள் / பழக விரும்புவர்கள் தேவை.
கிழமை / மாத அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு - இல 09, நந்தாவில் வீதி, தாவடி, யாழ்ப்பாணம்.
0777 120 945
(CS 26260)M-1

### நாகபூஷணி திருமண சேவை
MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, Govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும்.
264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306
(CS 26259)A-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 10 . 1954



மறைவு 01 . 09 . 2023

### அருளம்பலம் கமலநாதன்

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் கமலநாதன் அவர்கள் கடந்த (01.09.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் திருப்புகழாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், கலைறஜியின் அன்புக் கணவரும், சுவர்ணா (லண்டன்), அருள்முகன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், லக்ஷனின் (லண்டன்) அன்பு மாமனாரும், பவேஷின் அன்புப் பேரனும், ரவீந்திரநாதன் (கனடா), குகானந்தன் (கனடா), தயானந்தன் (கனடா), தயாபரன் (கனடா), கிரிஜாயினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மினி, ஜெயந்தினி, மனோகரி, சுகந்தி, வைத்தீஸ்வரன் (உடுவில் பிரதேச செயலகம்), நித்தியானந்தன் - றஜீனா, சுதாகரன் - சந்திரகலா (ஜேர்மனி), அருளானந்தம் - அனுஷா (டென்மார்க்), சாமகீதன் (ஜேர்மனி), நாகரூபன் - றம்ஜா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.118, சிங்கத்தின் கலட்டி வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 26263) A-1

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் வாக்காளர் இடாப்பு மூடுதல் 30.06.2023

30.06.2023 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இவ் இடாப்புக்கள் அங்கத்தவர்களின் ஆட்சேபனையைப் பெறுவதற்காக 01.09.2023 தொடக்கம் 19.09.2023 வரை பின்வரும் இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

| கிளைகள் | இடம் |
|---|---|
| • கிளை-01.02.03.04.05 | தலைமை அலுவலகம் |
| • கிளை-06 | உப தபால் நிலையம், நாரந்தனை வடக்கு |
| • கிளை-07 | கிராம சேவையாளர் அலுவலகம், J/56, தம்பாட்டி |
| • கிளை-08 | உப தபால் நிலையம், நாரந்தனை தெற்கு |
| • கிளை-09.10.11 | கோப்சிற்றி, புளியங்கூடல் |
| • கிளை-12 | கந்தசுவாமி கோயில் நாரந்தனை வடக்கு |
| • கிளை-13 | கிளை-13, மெலிஞ்சிமுனை |
| • கிளை-14 | கிறிஸ்துராசா ஆலயம், எழுவைதீவு |

அங்கத்தவர்கள் ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் 19.09.2023 இற்கு முன் எழுத்து மூலம் அல்லது நேரடியாக தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி வாக்காளர் இடாப்பை பூர்த்தி செய்ய உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
(CR/40080)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்கு கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை மருத்துவர் வாணி பிறேம்ஜித் ( USA ) என்பவரின் நிதிப்பங்களிப்பில், தொண்டு நிறுவனமாகிய 'வன்னி ஹோப்' நிறுவனத்தால் அத்தியாவசிய மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டன.

(ய-27)



குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா கடந்த 29ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

(ய-66)



பச்சிலைப்பள்ளி பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களின் ஆக்கப்பொருள் களின் மாதாந்த சந்தை கடந்த 28ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

(ய-9)



மன்னார்- நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரியம் மன் ஆலய மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

(ய-213)



மன்னார்- பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பங்கின்கீழ் இயங்கும் சென்.மேரிஸ், சென். விக்ரறீஸ் மற்றும் அமலதாசன் ஆகிய மூன்று முன் பள்ளி பாடசாலைகளின் மாணவர்களை ஒன்றிணைத்து நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை பேசாலை யில் நடைபெற்றது.



மன்னார் மறைமாவட்டத்தின் பாதுகாவலியும் உலகப் பகழ்பெற்ற புனித ஸ்தலமான மருதமடு அன்னையின் ஆலயப் பரிபாலகராக கடந்த 2018 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இவ் ஆலய பரிபாலகராகக் கடமையாற்றி வந்த அருட்பணி பெப்பி சோசை இடமாற்றம் பெற்ற தைத் தொடர்ந்து மன்னார் முன்னாள் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் புதிய ஆலய பரிபாலகராக மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையால் நிய மிக்கப்பட்டுள்ளார்

(ய-60)



கிளிநொச்சி - இராமநாதபுரம் புதுக்காட்டுப் பகுதயில் புதிதாக அமைக்கப்பட்ட ஐயப்பன் ஆல யத்தின் கும்பாபி ஷேக பெருவிழா 30ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

(ய-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆசிரியர் சங்கத்தின் போராளர் மாநாடு



யாழ்ப்பாணம், செப்.3

'தரமான கல்வியை உறுதி செய்து உரிமைகளை வென்றெடுப்போம்' எனும் தொனிப்பொருளில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 66ஆவது பேராளர் மாநாடு யாழில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்த மாநாடு பெருமளவிலான அதிபர், ஆசிரியர்களின் பங்குபற்றலுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் மதத் தலைவர்கள், ஆசிரியர் சங்கத் தலைவர், செயலாளர் உள்ளிட்ட சங்கப் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் எனப் பலரும் நாடு முழுவதிலும் இருந்து வந்து கலந்துகொண்டிருந்தனர்.

நீண்ட காலமாக ஆசிரியர் சங்கத்திலிருந்து சேவையாற்றிய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். (எ-27)




# மஹிந்தவை கைகழுவியது சு.கட்சி

கொழும்பு, செப்.3

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டுக்கு அந்தக் கட்சியின் முன்னாள் தலைவரான மஹிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை .

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இந்தத் தகவலை தற்போதைய கட்சித் தலைவரான மைத்திரிபால சிறிசேன உறுதிப்படுத்தினார்.

சுதந்திரக்கட்சியின் 72ஆவது ஆண்டுவிழா கொழும்பில் இன்று நடைபெற வுள்ளது. அந்த மாநாட்டில் பங்கேற்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவரும் கட்சித் தலைமை பதவியை வகித்தவர். 2005 முதல் 2015வரை சுதந்திரக்கட்சிக்குத் தலைமை வழங்கிய மஹிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. (எ-44)

## விகாரைக்கு...

திருகோணமலையில் தமிழர் குடியிருப்புக்களின் மத்தியில் அமைக்கப்படவுள்ள விகாரைக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் தடைவிதித்ததைத் தொடர்ந்து, பிக்குகள் அத்துமீறிச் செயற்பட்டு, திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்துக்குள் புகுந்து குழப்பம் விளைவித்திருந்தனர்.

விகாரை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள அரச காணிக்குள் பிக்குகள் நுழைய பிரதேச செயலர் தடைவிதித்திருந்தார். பிக்குகளின் குழப்பத்தைத் தொடர்ந்து, அந்தத் தடையுத்தரவு விலக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பெரியவெளி சந்தியில் இன்று போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று நடக்கவுள்ள நிலையில், அதற்கு எதிராக விகாராதிபதி தரப்பினரும் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், இது இன முறுகலை ஏற்படுத்தும் என்றதன் அடிப்படையில் நிலாவெளி பொலிஸாரால் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இரு தரப்பிலும் தலா 7 பேர் வீதம் 14 பேருக்கு தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட போராட்டத் தரப்பினர் 7 பேருக்கும், விகாராதிபதி உள்ளிட்ட 7 விகாரைக்கு ஆதரவானவர்களுக்கும் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

## பட்டப்பகலில்...

ஒருவர் நேற்று முற்பகல் 11 மணியளவில் வாகனமொன்றில் கடத்தப்பட்டுள்ளார்.

மகேந்திரா ரக வாகனத்தில் வந்த 10 பேர் கொண்ட கும்பல் வியாபாரியைக் கடத்திச் சென்றுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணக் கொடுக்கல் - வாங்கல் காரணமாகவே இந்தக் கடத்தல் இடம்பெற்றுள்ளதாக உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

# முருங்கைக்காய் விலை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், செப். 3

யாழ். குடாநாட்டில் முருங்கைக்காயின் விலை சடுதியாகக் குறைவடைந்துள்ளது என்று நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

வெப்பகாலநிலைக்கு முருங்கைக்காய் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுவதால் அவற்றின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது என்று செய்கையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முருங்கைக்காய் தற்போது 150 ரூபாவாகச் சரிந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் செயற்பாட்டால் மீள நெருக்கடி ஏற்படும்

## புதிய மார்க்சிச லெனின் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.3

எதிர்வரும் காலத்தில் நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்படவுள்ளது. அண்மையில் பங்களாதேஷிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடனின் ஒரு பகுதி மீள வழங்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகி உள்ளன. நிச்சயமாக நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்படச் சாத்தியம் உள்ளது இவ்வாறு புதிய மார்க்சிச லெனின் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த ஆட்சியாளர்கள் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச நாணய நிதி கிடைத்தவுடன் நாங்கள் இலங்கையை சொர்க்கமாக்குவோம் எனக் கூறியிருந்த னர். ஆனால், தொடர்ந்தும் கடன் வாங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். வேறு வேறு நாடுகள், வேறுவேறு அமைப்புகள் ஊடாகக் கடன் வாங்குகின்றார்களே தவிர கடன் கொடுப்பதாக இல்லை. நாட்டினுடைய உற்பத்தியை மக்கள் இணைந்து பெருக்கினால் மட்டுமே இவர்கள் இந்தக் கடனில் இருந்து தவற முடியும் என்பது நிதர்சனம். அதன்மூலமே தேசிய பொருளாதாரத்தைப் படிப்படியாகக் கட்டி அமைக்கமுடியும்- என்றார். (எ-27)

# லான்சா அணிக்கு தலைவர் யாப்பா

கொழும்பு, ஓக. 3

பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் நிமல் லான்சா தலைமையிலான அணியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா நியமிக்கப்பட்டுள் ளார்.

இன்று நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் தமது அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதன் தலைவரான அநுர பிரியதர்ஷன யாப்பா பங்கேற்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா குறிப்பிட்டுள் ளார்.

அநுர பிரியதர்ஷன யாப்பா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் சிறிது காலம் கடமையாற்றியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு 30க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தமது குழு ஆதரவளிக்கும் எனவும் நிமல் லான்சா குறிப்பிட்டுள்ளார். (எ-44)

# இலங்கையின் வளர்ச்சிக்கு ஜப்பான் துணைநிற்கும்!

## அந்த நாட்டின் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 3

விரைவான பொருளாதார உறுதிப்பாட்டை இலக்காகக் கொண்டு செயற்படும் இலங்கை வலுவானதொரு முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு முழுமையான ஒத்துழைப்பை ஜப்பான் வழங்கும் என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள தகஷிதி யுசுகே தலைமையிலான மேலவை அமைச்சர் சபையின் பிரதிநிதிகள், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி ஆகியோருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நிதியமைச்சில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே ஜப்பான் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார். (ச-இ)

# பிரகாஸ் நினைவாக இரத்ததான நிகழ்வு



மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஸின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. இதில் பெருமளவானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஸ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு நோயால் பாதிக்கப்பட்டு நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டது. அதனால் தனது பாடசாலைக் கல்வியை அவர் இடைநிறுத்தினார். ஆயினும் தனது விடா முயற்சியால் ஊடகத்துறையில் தனக்கென ஓர் இடத்தை தக்கவைத்திருந்தார். 2021ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார். (எ-27)

**பணிப்பெண் தேவை**

யாழ். நாவலர் வீதியில் தங்கிநின்று வீட்டுவேலைகள் செய்வதற்கு உகந்த பணிப்பெண் தேவை

தொடர்புகளுக்கு : 077 521 7750

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை

077 2987 506

**பணிப்பெண் தேவை**

யாழ். திருநெல்வேலியில் தங்கிநின்று வீட்டுவேலை செய்வதற்கும் குழந்தையை பராமரிப்பதற்கும் உகந்த பணிப்பெண் தேவை

தொடர்புகளுக்கு : 077 5330 111

**வேலையாள் தேவை**

யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில் மோட்டார் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு வேலையாள் தேவை

(ஆண் வயது 18 தொடக்கம் 25 வரை)

தொடர்பு :

077 521 7750

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ, 41 வயது திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை.

077 905 8615

(வைபர் & வாட்ஸ் ஆப்)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு**

BIT xxxx என்ற Honda DIO-Bike விற்பனைக்குண்டு.

077 628 0685

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நகரில் இருந்து 7km சுற்று வட்டத்திற்குள் உணவு உற்பத்தி தொழிற்சாலை நடத்துவதற்கு ஏற்ற வீடு வாடகைக்குத் தேவை.

077 628 0685

**கார் விற்பனைக்கு**

WP HY xxxx இலக்கமுடைய Honda Civic கார் விற்பனைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம்:

பிற்பகல் 5 மணிக்குப்பின்னர்.

தொடர்பு: 0777 100 324

**இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்**

பிரிவு 49

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singalam
- Diploma in Psychology & Counselling
- Diploma in Business Management
- Diploma in Project Management
- Diploma in Care Giver
- Diploma in Nursing
- Diploma in Hotel Management

காலம் : 3 மாதங்கள்

பெறுமதிமிக்க சான்றிதழ்

ஆரம்பம்

09.09.2023, 10.00 AM

Free Consultancy Service:

UK, Canada, Australia போன்ற நாடுகளுக்கான VISA ஆலோசனைகள் எமது சட்டத்தரணிகளால் இலவசமாக வழங்கப்படும்.

IPS Thirunelvely, Jaffna.

T.P:- 021 434 0229

076 685 2529

# மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 05 . 1956



இறப்பு 02 . 09 . 2023

## குணசிங்கம் சிவனேஸ்வரி

அளவெட்டி தெற்கை பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் சிவனேஸ்வரி அவர்கள் நேற்று (02.09.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி அன்னலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், குணசிங்கம் (அப்பன்) அவர்களின் அன்பு மனைவியும், றொசாந்தன் அவர்களின் அன்புத் தாயாரும், ஜீவனா அவர்களின் அன்பு மாமியாரும், ஞானேஸ்வரி, ஜெகதீஸ்வரன், நாகேஸ்வரன், தியாகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சற்குணநாதன், இரவிந்திரன், அகிலன், காலஞ்சென்ற திகழ்மதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமரர் துளசிமலர், தயாநிதி சற்குணநாதன் (ராசா), சுமித்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தகவல்:
கு.குணசிங்கம் (அப்பன்)
077 859 1401

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின்...

போர் முடிந்த பின் 2010ஆம் ஆண்டில் வடக்கின் 5 மாவட்டங்களிலுமாக 10 இலட்சத்து 35 ஆயிரத்து 89 தமிழர்களும், 34 ஆயிரத்து 376 முஸ்லிம்களும், 17 ஆயிரத்து 830 சிங்களவர்களும் வசித்துள்ளனர். ஆனால், 2022 ஆம் ஆண்டு இறுதியில் 11 இலட்சத்து 16 ஆயிரத்து 260 தமிழர்களும், 89 ஆயிரத்து 627 முஸ்லிம்களும், 33 ஆயிரத்து 835 சிங்களவர்களுமாக அந்தக் குடிப்பரம்பல் மாற்றமடைந்துள்ளது.

தமிழர்களின் எண்ணிக்கை 14 ஆண்டுகளில் 81 ஆயிரத்து 171 ஆல் அதிகரித்துள்ளது. முஸ்லிம்களின் எண்ணிக்கை 55 ஆயிரத்து 251 பேரால் கூடியுள்ளது. சிங்களவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 5ஆல் அதிகரித்துள்ளது.

வடக்கின் இனப்பரம்பலை மாற்றியமைக்க அரசாங்கம் திட்டமிட்டு குடியேற்றங்களை மேற்கொண்டு வருவதாக தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## பாதுகாப்புக்காக...

யாழ்ப்பாணம் கோட்டை தொல்பொருள் சின்னமாக அறிவிக்கப்பட்டு அதன் பாதுகாப்புக்காக அதனுள் தங்கியுள்ள இராணுவத்தினரே கோட்டையைச் சுற்றியுள்ள அகழியில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளமை, தொல்பொருள் சின்னத்தைச் சேதப்படுத்தும் நடவடிக்கை என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

கோட்டையில் தங்கியுள்ள இராணுவத்தினர் தினமும் இரவு வேளைகளில் அகழியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தொல்பொருள் சின்னமாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில் எந்தவொரு நடவடிக்கையும் தொல்பொருள் திணைக்களத்தின் கண்காணிப்பு இல்லாமல் முன்னெடுக்கப்படமுடியாது. ஆனாலும் இராணுவத்தினர் தினமும் மீன்பிடியில் ஈடுபடுகின்றபோதும் பொலிஸாரோ, தொல்பொருள் திணைக்களத்தினரோ நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்ப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. (ஒ-26)

## தீவகத்துக்கான...

பிரதேசங்களுக்கு தற்காலிகமாக 3 நாள்களுக்கு ஒரு தடவை மட்டுமே குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் வே.உதயசீலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில்;

தற்போது மண்டைதீவு மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்துக்கான நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிதண்ணீர் பெறப்படும் நிலையங்களில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக மக்களுக்கு வழங்கும் குடிதண்ணீரின் அளவில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் வறட்சி காரணமாக மக்களின் பாவனை வீதமும் அதிகரித்துள்ளது. இதனால் நீர் விநியோகத்துக்கான குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மழையால் உருவாக்கப்படும் நிலத்தடி நீர்நிலைகளை நம்பியே நீர் விநியோகத்திட்டங்கள் உள்ளன. நீர்நிலைகள் அற்றுப்போகுமானால் குடிதண்ணீர்விநியோகத்தில் தடங்கல் ஏற்படும். எனவே பாவனையாளர்கள் குடிதண்ணீரை வீண்விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாக குடிதண்ணீருக்கும் சமையல் தேவைக்கும் மட்டும் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## ஐ.எம்.எப்...

தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் வழங்கப்பட்ட தவறான தகவல்களின் அடிப்படையில் இதற்கு எதிராக வழக்கு தொடர்ந்தமையின் காரணமாக உரிய கால எல்லைக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்.) நிபந்தனையை நிறைவேற்ற முடியாமற்போயுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் காலதாமதங்கள் ஏற்பட்டாலும், அவை நிறைவேற்றப்பட்டுள்ளன. ஜூன் 30 ஆம் திகதிக்குள் எட்டப்பட வேண்டிய வருமானத்தை உயர்த்தும் இலக்கு மட்டுமே இன்னமும் எட்டப்பட்ட வேண்டியுள்ளது. சில பொருளாதார ஆய்வு நிறுவனங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் 35 வீதம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கூறுவது தவறான தரவுகளாகும்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புடன் தொடர்புபடுத்தி ஊழியர் சேமலாப நிதி 50 வீதத்தால் குறைக்கப்படும் என சிலர் கூறுவது பொய்யானது. ஒவ்வொரு வருடமும் 9 வீதத்தால் ஊழியர் சேமலாப நிதி அதிகரிக்கிறது - என்றார். (அ-ஒ-இ)

## உடனடியாக...

இருப்பதாக அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணிலுக்கு உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் சந்தர்ப்பத்தை வழங்க முடியும். மக்கள் ஆணையில்லாத தலைவராக சட்டவிரோதமான முறையில்நாட்டைஆட்சிசெய்துவருகிறார். நாடு மிகப் பெரியளவில் பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியில் அராஜக நிலைமையை நோக்கிப் பயணித்து வருகின்றது. ஜனாதிபதி தனது அழகான கதைகள் மூலம் கட்டியெழுப்பும் பொருளாதாரம் மக்களுக்கு தீயாக மாறி வருகிறது.

மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

தொழிசார் நிபுணர்கள் தொகை, தொகையாக நாட்டைக் கைவிட்டுச் செல்கின்றனர். நிர்மாணத்துறை முற்றாக ஆபத்தில் தள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதிப் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க வந்து14 மாதம் கடந்துள்ளது. இதனால், அவர் தொடர்ந்தும் நாட்டையும் மக்களையும்அதலபாதாளத்துக்குள்கொண்டு செல்லாமல், மக்கள் ஆணை என்ற உரிமையைத் தடுக்காது, உடனடியாகப் புதிய ஆட்சியை ஏற்படுத்த சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக அரசமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வரத் தயார் என்றால், ஜனாதிபதித் தேர்தல் நடைமுறை காலவரையறையுடன் அதனைக் கொண்டு வரவேண்டும். அப்போது அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம் - என்றார். (அ-ஒ-இ)

## மோசமான...

பட்டது. இந்தப் பயணம் ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணத்தை இந்திய வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவிக்காதபோதிலும் இலங்கையில் நிலவும் சீரற்ற வானிலை குறித்து இலங்கை அதிகாரிகள் வழங்கிய தகவலின் பிரகாரமே இந்தப் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திருகோணமலை மற்றும் நுவரெலியாவுக்கு செல்லும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் திடீரென மாறியுள்ள வானிலையால் நுவரெலியா மற்றும் திருகோணமலைக்கு வான்வழியில் செல்வது கடினமாக இருக்குமென இலங்கை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளதை அடுத்தே இந்தப் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-ஒ-இ)

## மோ.சைக்கிள்...

தனியாக வீட்டிலிருந்த நிலையில் அதிகாலை 5 மணியளவில் கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளைக் கும்பல் குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து 11 பவுண் நகை, இரண்டு இலட்சம் ரூபா பணம் மற்றும் 3 பெறுமதி வாய்ந்த தொலைபேசி என்பனவற்றையும் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் கொள்ளையடித்து தப்பித்துச் சென்றது.

கடந்த 30ஆம் திகதி மோட்டார் சைக்கிள் ஒன்று விளாவெளிச்சுடலையில் நிற்பதாக மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளைக் கைப்பற்றியுள்ளனர். கொள்ளையர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-125)

## இராணுவப்...

திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர் மஹியங்கனை - பூஜாபிட்டிய பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் மீரிஹான இல்லத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போதே பேருந்துக்குத் தீ வைத்த குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டார். அப்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் புரட்சி(அரகலய) இங்கேயே ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)

## இணைய...

பறிகொடுத்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார். லண்டனிலிருந்து வந்த ஒருவரிடம் 72 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று அதற்குப் பதிலாக காசோலை வழங்கியுள்ளார்.

காசோலை வங்கியில் பணம் இல்லாது திரும்பிய நிலையில் அது தொடர்பில் லண்டன்வாசியால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் விசாரணையை முன்னெடுத்த பொலிஸார் உரும்பிராயைச் சேர்ந்த சந்தேகநபரைக் கைது செய்தனர். இவரை நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. இதேவேளை, இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்ட இணையம் ஊடான சூதாட்டத்தில் ஒரு வாரத்தில் 72 இலட்சம் ரூபாவையும் இழந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது சந்தேகநபர் தெரிவித்துள்ளார். விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழுவினரே இவரைக் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26)

## ஒரு வாரத்தில்...

வெளியிடங்களுக்குச் செல்வதற்கு அச்சம் ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:-

இங்குள்ள பூட்டிய வீடுகளைக் குறிவைத்து பட்டப்பகலில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. வீட்டை உடைத்து நுழையும் திருடர்கள் பணம், தங்க நகைகள், அலைபேசிகள், மடிக்கணினிகள் உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருள்களை களவாடிச் செல்கின்றனர். சில வீடுகளில் சி.சி.ரி.வி. கமராக்களைக்கூட திருடர்கள் விட்டுவைக்கவில்லை.

கைதடி, நுணாவில், கல்வயல், பெருங்குளம், சங்கத்தானை உள்ளிட்ட இடங்களில் இந்தத் திருட்டுகள் அதிகளவில் பதிவாகியுள்ளன. கடந்த ஒரு வாரமாக இடம்பெறும் இந்தத் திருட்டுகள் தொடர்பில் முறைப்பாடுகள் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலிஸார் உடன் நடவடிக்கை எடுத்து, இந்தத் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்- என்றனர். (அ-ஒ-ச-9)


A/L Online Group Classes
Biology, Chemistry
Jaffna Lecturer :- 077 807 5566

தேவை
மில் வேலைக்கு ஆள் தேவை. (CS/51837)AH-1
077 610 6643

வேலையாள்கள் தேவை
யாழில் இயங்கும் புத்தக. போட்டோ கொப்பி கடைக்கு பெண் ஊழியர்கள் தேவை.
சம்பளம் - 18000 - 25000
அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
076 832 3682

விற்பனைக்கு
லாண்ட் மாஸ்ரர், Direct 550, புதிய பெட்டி, பிளவு கலப்பை, றொட்ட வேற்றர் Japan தயாரிப்பு, ஆங்கில இலக்கத்தகடு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
இடம் : கோப்பாய் - (CS/51924)AH-
077 793 0948, 077 717 9172

வேலையாள்கள் தேவை
யாழ்நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு Cashier மற்றும் Room boy வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
077 668 1840
(cs 26140) N1 3x4

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
- நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
- செம்மண்காண் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
- 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
நிலப்பரப்பு
பார்வையிடும் நேரம் :-
காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை
தொடர்பு:- குரு 076 755 8606, 077 8743 204, 077 2880 152.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

முந்தலிலே வாழ்கின்ற தேவர்
முழுத்தொழிற்கும் முதலாளி ஆவர்.
இந்த விலை விற்கிறதே
ஏன் செருப்பை தேய்ப்பான் என்று
அந்தரத்திற் தான் நடந்துபோவார்
மஹாகவி


சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 (03.09.2023) சிகரம்: 164

# குருந்தூர்மலை தொடக்கம் கஜேந்திரகுமாரின் வீடுவரை !







○ நிலாந்தன்

*இலங்கைத்தீவின் சமகால பௌத்த அரசியல் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஜனநாயக உள்ளடக்கம் இல்லை. அது தனது அரசியல் அபிலாஷைகளை ஜனநாயகத்தின் மொழியில் வெளிப்படுத்துவதும் இல்லை. அதுவும் பிரச்சினையின் ஒரு பகுதிதான்.*

***பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட***

கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போலவே கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானோடு பிக்குகள் மோதத் தொடங்கிவிட்டார்கள்.

திருகோணமலை கச்சேரியில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குள் அத்துமீறிப் புகுந்த பிக்குகள் அடங்கிய குழுவை யாராலும் தடுக்க முடியவில்லை. அங்கே பொலிஸ் இருந்தது. அரச உயர் அதிகாரிகள் இருந்தார்கள். அங்கிருந்த சிங்கள உயர் அதிகாரிகள் பிக்குகளைக் கண்டதும் எழுந்து நிற்கிறார்கள். சிறு தொகுதி தமிழ் அதிகாரிகள் எழுந்து நிற்கவில்லை. ஆளுநரும் எழுந்து நிற்கிறார். அவருடைய உதவியாளர் யாருக்கும் கைபேசியில் அழைப்பை எடுக்கிறார். ஆனால் யாராலும் அந்த இடத்திலிருந்து பிக்குகளை அகற்ற முடியவில்லை. ஊடகவியலாளர்கள் சம்பவத்தை நேரலையாக ஒளிபரப்புகிறார்கள். அந்த இடத்தில் பிக்குவுக்குப் பதிலாக வேறு யாராவது இருந்திருந்தால் சட்டப்படி கைது செய்திருப்பார்கள். ஆனால், இலங்கைத்தீவின் தேரவாத பிக்குகள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள்.

பிக்குகள் மட்டுமல்ல, சிங்கள- பௌத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள்தான். நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி சரத் வீரசேகர இரண்டாவது தடவையாக முல்லைத்தீவு நீதிபதியை இழிவான வார்த்தைகளில் அவமதித்திருக்கிறார். நாடாளுமன்ற சிறப்புரிமை எனப்படுவது நீதிபதியை நீதிமன்றத்தை அவமதிப்பதற்கான ஒரு கவசமா? சரத் வீரசேகர அதை ஒரு கவசமாகத் தான் பயப்படுத்துகிறார். பிக்குகளும் சரத் வீரசேகரங்களும் சட்டத்தைக் கையில் எடுக்கிறார்கள், நீதிமன்றங்களை அவமதிக்கின்றார்கள்.

தையிட்டியில் விகாரை கட்டப்பட்டிருப்பது தனியார் காணியில். அது சட்டவிரோதம். தொல்லியல் திணைக்களம் குருந்தூர்மலையில் நீதிமன்றத்தின் ஆணையை மதித்து நடக்கவில்லை. மயிலத்தனைமடு மாதவனை மேய்ச்சல் தரையிலும் கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையை அமுல்படுத்த முடியவில்லை. செந்தில் தொண்டமான் கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டதும் அவ்வாறு சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படுகின்ற காணி அபகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்த முற்பட்டார்.

திருகோணமலையில் சற்று உயரமாக, குன்றுகளாகக் காணப்படும் எல்லா இடங்களிலும் விகாரைகளைக் கட்டுவது என்று ஒருபகுதி தேரர்கள் முடிவெடுத்துவிட்டார்கள் போலத் தெரிகிறது.

ஏற்கனவே கன்னியாய் வெந்நீரூற்றுப் பகுதியில் ஒரு விகாரை கட்டப்பட்டுவிட்டது. வெருகலில், கல்லடியில், மலைநீதியம்மன் மலையில் 2006 இல் ஒரு விகாரை கட்டப்பட்டுவிட்டது. அந்த மலையில் முன்பு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தகவற்தொடர்புக் கட்டுமானம் ஒன்று இருந்தது. அதில் இப்பொழுது விகாரை உள்ளது. அங்கு மேலும் நிலத்தைப் பிடிக்கும் நடவடிக்கைகளை மக்கள் எதிர்க்கிறார்கள்.

திருகோணமலை, குச்சவெளி ஆகிய இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளினதும் எல்லையில் உள்ள ஆறாங்கட்டை அல்லது பெரியகுளம் என்ற இடத்தில் திருகோணமலை நிலாவெளி வீதியில் ஒரு விகாரையைக் கட்ட முயற்சிக்கப்படுகிறது. கிழக்குப் பல்கலைக்கழக வளாகம் அதற்கருகே காணப்படுகிறது. பிரதேசசபை அதற்கு அனுமதி வழங்கவில்லை. எனினும் வழிபாட்டிடங்களைக் கட்டுவதற்கு பிரதேசசபையின் அனுமதி தேவையில்லை என்று பிக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஒழுங்குபடுத்திக் கூறியுள்ளார்கள்.

அடுத்தது, புல்மோட்டைப் பகுதியில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் அரிசி மலைப் பகுதி. அங்குள்ள கடற்கரையில் காணப்படும் குறுணிக் கற்கள் அரிசிபோல அழகாக இருப்பதால் அப்பகுதிக்கு அப்படி ஒரு பெயர். அங்கேயும் ஒரு விகாரையைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.

அடுத்தது. குச்சவெளி பொலிஸ் நிலையத்துக்கு எதிராக ஒரு சிறிய குன்று. அங்கே ஒரு விகாரை ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

அடுத்தது. தென்னை மரவாடியில் உள்ள சிறிய மலை. அது யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரைக்கு வரும் யாத்திரிகர்கள் இளைப்பாறும் ஒரு மலையடிவாரம். அதனால் அது கந்தசாமிமலை என்று அழைக்கப்படுகிறது. அங்கேயும் ஒரு விகாரையைக் கட்ட ஏற்பாடுகள் நடப்பதாகத் தகவல். தென்னை மரவாடிச் சந்தியில், முல்லைத்தீவுக்குத் திரும்புமிடத்திலும் மூதூரில் மூன்றாங்கட்டைப் பகுதியிலும் விகாரைகளைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடப்பதாக அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் செறிவாக வாழும் பிரதேசங்களில் குறிப்பாகப் பெரியகுளம் பகுதியில் விகாரை அமைக்கப்படுவதை செந்தில் தொண்டமான் தடுக்க முற்பட்டார். அதனால் திருகோணமலை கச்சேரியில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் குழப்புவதற்கு, கச்சேரிக்கு முன்பாக பிக்குகள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். முடிவில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குள் புகுந்து அதனைக் குழப்பியிருக்கிறார்கள்.

செந்தில் தொண்டைமான் மத்திய அரசின் அதிகாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மாகாண ஆளுநர். ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள், மாகாணசபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரைவிடவும் ஆளுநருக்கே அதிகாரம் அதிகம். தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத ஆளுநர் பதவிக்கு ஒரு தமிழரை நியமித்ததன் மூலம் அவர் தீர்வைத் தரப்போகிறார் என்ற ஒரு தோற்றம் முதலில் கட்டியெழுப்பப்பட்டது. செந்தில் தொண்டைமானின் நியமனத்தின் பின்னணியில் இந்தியாவைத் திருப்திப்படுத்தும் நிகழ்ச்சிநிரல் உண்டு. ஆனால், பிக்குகள் ஆளுநரோடு மோதத் தொடங்கிவிட்டார்கள்.

அண்மை மாதங்களாக சிங்கள - பௌத்த மயமாக்கல் மற்றும் நிலப்பறிப்பு நடவடிக்கைகளில் பௌத்த மதகுருக்கள் முன்னிலையில் நிற்கிறார்கள். குருந்தூர்மலை தொடக்கம் கஜேந்திரகுமாரின் வீடுவரை பிக்குக்களே காணப்படுகிறார்கள். அது தற்செயலான ஒன்றாகத் தெரியவில்லை. திணைக்களங்களும் அரசபடைகளும் பொலிஸும் வெளிப்படையாகச் செய்யமுடியாத விடயங்களுக்கு பிக்குக்கள் முன்னிறுத்தப்படுகிறார்களா? சிங்கள மக்கள் மத்தியில் பிக்குகளுக்கு மதிப்பு உண்டு. அவர்கள் சன்னியாசிகளாகப் பார்க்கப்படுகின்றார்கள். அதனால்தான் மயிலத்தனைமடு மாதவனை மேய்ச்சல் தரையில் பல்சமயக் குழுவினரை முற்றுகையிட்டு வைத்திருந்த பிக்குவை அங்கு வந்த பொலிஸ் அதிகாரி முதலில் காலில் விழுந்து வணங்கினார். அப்படித்தான் திருகோணமலைக் கச்சேரிக்குள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தைக் குழப்பிய பிக்குகள் மாநாட்டு மண்டபத்துக்குள் நுழைந்ததும் பெரும்பாலானவர்கள் எழுந்து நிற்கிறார்கள். அவர்கள் சன்னியாசிகள் என்பதனால் அந்த மதிப்பு. அந்த மதிப்பை ஒரு கவசமாகப் பயன்படுத்தி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் அவர்கள் முன் நிறுத்தப்படுகிறார்கள்.

அதாவது ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன் வாக்களித்தபடி ஆயிரம் விகாரைகளைக் கட்டி முடித்துவிடுவேன் என்று முடிவெடுத்து விட்டாரா? அடுத்த ஆண்டு முடிவதற்கிடையில் அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அதற்கிடையே நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியுமோ தெரியவில்லை. சஜித்தின் தலைமை பலவீனமாக இருப்பது ரணிலுக்கு ஒரு வரப்பிரசாதம். எனினும் சஜித் ஏனைய கட்சிகளோடு ஒரு பெருங்கூட்டை உருவாக்கினால் அது ஒப்பீட்டளவில் சவாலாக மாறும்.

இம்முறை தமிழ் வாக்குகள் தனக்குக் கொத்தாக விழப்போவதில்லை என்று ரணிலுக்குத் தெரிகிறது. ராஜபக்சகளின் அனுசரணையோடு அவர் தேர்தலில் போட்டியிட்டால் தமிழ் வாக்குகளை முழுமையாகப் பெறமுடியாது. எனவே தமிழ் வாக்குகளுக்காக தமிழ் உணர்வுகளோடு சமரசம் செய்வதை விடவும் சிங்கள - பௌத்த வாக்குகளைக் கவர்வதே அவருக்கு இப்போதுள்ள இலகுவான வழி.

மேலும் அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரின்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையோடு ஒரு புதிய தீர்மானம் நிறைவேற்றப்படலாம். தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொடர்ச்சியாக அமையுமா அல்லது புதியதாக அமையுமா என்று பார்க்கவேண்டும். முன்னைய தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாகவும் அந்தத் தீர்மானத்தில் முடிவெடுக்கப்படக்கூடும். எனவே அக்காலகட்டம் இலங்கையில் சிங்கள - பௌத்த உணர்வுகளை அதிகம் தூண்டக்கூடிய ஒரு காலகட்டமாக அமையும். அதைத்தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தல் வரும். அதில் ராஜபக்சகளின் அனுசரணையோடு ரணில் களமிறங்குவாராக இருந்தால் அவர் ஐ.நா. தீர்மானத்தின் விளைவாகத் தூண்டிவிடப்பட்ட சிங்கள - பௌத்த உணர்வுகளுக்குத் தலைமை தாங்கி எப்படி அடுத்த ஜனாதிபதியாக வரலாம் என்றுதான் சிந்திப்பார்.

அதனால் இப்பொழுது நடக்கும் சிங்கள - பௌத்த மயமாக்கல் மற்றும் நிலப்பறிப்பு நடவடிக்கைகள் மேலும் முடுக்கி விடப்படக்கூடிய அரசியற் சூழலே வளர்ச்சியடைந்து வருகிறது. இதில் சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ, மேர்வின் டி சில்வா.. போன்றவர்கள் எழுப்பும் இனவாத அலையின் விளைவுகளையும் ரணில் தனக்குச் சாதகமாக அறுவடை செய்து கொள்வார். எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள- பௌத்த வாக்குகளைக் கவர, தேவையான தனது தகைமையை எப்படி அதிகப்படுத்துவது என்றுதான் ரணில் சிந்திப்பார். அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள-பௌத்த மயமாக்கலையும் நிலப்பறிப்பையும் அவர் நிறுத்தக்கூடிய வாய்ப்புகள் மிகக் குறைவு.

அண்மையில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலரைச் சந்தித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் குருந்தூர்மலை தொடர்பாக அமெரிக்கா உற்றுக் கவனிப்பதாகக் கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது. அதில் அவர் இந்துத் தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விசாரித்திருக்கிறார். தமிழ் ஊடகங்களில் கூறப்படுவதுபோல அவர் வெளிப்படையாக ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளைக் குறித்து எதுவும் பேசவில்லையாம். மேலும் அவர் உரையாடலின் போக்கில் குருந்தூர்மலை பற்றிச் சொல்லியிருக்கிறாரே தவிர, அதை அமெரிக்கத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாக ருவிற்றரில் பதிவிட்டிருக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேற்கு நாடுகள், ஐ.நா. போன்றன சிங்கள- பௌத்த மயமாக்கலைக் குறித்து வெளிப்படையாக உத்தியோகபூர்வமாக எதையும் தெரிவித்திராத ஒரு சூழலில், பிக்குகள் அதைச் செய்யும்போது அதைத் தடுக்காமல் விடுவது ரணிலைப் பொறுத்தவரை தற்காப்பானது; அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அவருடைய வெற்றி வாய்ப்புகளைப் பாதுகாப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகம் பெரும்பான்மையின மாணவர்களால் நிரம்புகிறதா?



○ நேர்கண்டவர்: ஜெயச்சந்திரன் சுலக்சன்

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எனும் அரியணையில் மீண்டும் அமர்ந்திருக்கும், கணிதவியல் பேராசிரியரான சி.சற்குணராஜாவை 'உதயன் - சஞ்சீவி' வாசகர்களுக்காக நேர்கண்டோம். அதன் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**

**கே:** **பொதுவாக எமது பல்கலைக்கழகங்கள் ஏட்டுச்சுரக்காய்த்தனமான பட்டதாரிகளை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளாக மட்டுமே இருக்கின்றன என்றும், அவர்களைச் சமூகத்துக்குப் பயனுள்ளவர்களாக, தொழில் நிபுணத்துவம் மிக்கவர்களாக மாற்றுவதில்லை என்றும் குற்றச்சாட்டுகள் உண்டு. அதனை மாற்றியமைக்க நீங்கள் எடுத்த, எடுக்கப்போகும் முன்னெடுப்புகள் எவை?**

**ப:** இந்த வினாவானது 'ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது' என்ற முதுமொழியை முன்நிறுத்தி ஏட்டினால் மட்டுமான கல்வியைப் பல்கலைக்கழகம் மாணவர்களுக்குப் புகட்டுவதாயும் அதனால் பட்டதாரிகள் தனித்தியங்க முடியாதவர்களாகவும். தொழில்துறை நிபுணத்துவமற்றவர்களாகவும் வெளிவருவதாகத் தாங்கள் கருதுவதை வெளிப்படுத்துவதாக உணர்கிறேன். இப்படியான கருத்தோட்டம் இன்று பலர் மத்தியில் உள்ளதனை நானும் அறிவேன். ஆனால் அந்தக் கருத்தோட்டம் பின்வரும் விடயங்களைப் புரிந்துகொள்வதன் வாயிலாகச் சற்று மீளாய்வுக்குட்படுத்தப்படல் வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

கல்வி என்பது கேட்டல். அறிதல் மற்றும் செயற்படுதல் என்கின்ற மூன்று பிரதான நிலைகளினூடாக புகட்டப்பட்டு உணரப்படவேண்டியதாகும். இவற்றுள் கேட்டல் மற்றும் அறிதல் என்பன அதிகம் ஏட்டுக்கல்வியை மையமாகக்கொண்டது என்பதனை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அவ்வாறு ஏட்டுக் கல்வியால் கேட்டும் அறிந்தும் கொண்டவற்றின் அடிப்படையில் செயற்படும்போதுதான் பெற்ற கல்வி பூரணமடையும் என்பதில் மாற்றுக்கருத்து எமக்குக்கிடையாது.

இங்கு முக்கியமாகப் பார்க்கப்படவேண்டிய விடயம் யாதெனில், எமது பல்கலைக்கழகத்தில் கேட்டல் மற்றும் அறிதலுக்கான வாய்ப்புகளை வழங்க ஏதுவாகக் கலைத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆய்வுகளை மேற்கொள்வதற்கான சூழல்கள் பௌதிக ரீதியில் நன்கு கட்டமைத்து வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் வழியாகக் கொடுக்கப்படும் அறிவினைக்கொண்டு அதனைப் பிரயோகிக்கும் திறனை விருத்திசெய்யவும் சில செயற்பாடுகள் வன் மற்றும் மென்திறன் விருத்தி என்கின்ற கட்டமைப்பின்கீழ் பல்கலைக்கழகக் கலைத்திட்டத்தினூடாக வழங்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இவற்றையெல்லாம் தாண்டிப் பெற்றுக்கொண்ட அறிவையும் திறனையும் கொண்டு செயற்படவேண்டிய பொறுப்பு பட்டதாரிகளுக்கு உரியதேயன்றிப் பல்கலைக்கழகத்துக்கு உரியதன்று. அத்தகு தன்மையானது பட்டதாரிகளின் மனப்பாங்கின் வழி அமையப்பெறுவதாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக மனப்பாங்கு சார்ந்து நாங்கள் இன்னமும் ஒரு குறுகிய வட்டத்துக்குள் கட்டுண்டுபோய் பல்கலைக்கழகம்தான் எமக்கான செயற்பாட்டுக் களத்தை ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும் ,தொழிலுக்கான வாய்ப்பையும் ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும் காணப்படுவதே இந்தப் பிரச்சினைக்கெல்லாம் காரணம். இவ்வாறான சிந்தனைப்போக்கில் இருந்து பட்டதாரிகள் வெளிவரவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

முன்பும் இன்றும் கல்வி தொடர்பாக எம்மிடையே உள்ள மனப்பாங்கு நிலையை பின்வரும் உதாரணங்களூடாகப் பார்த்தால் புரியும். நாம் பாடசாலையில் கற்கின்ற காலத்தில் சூரியநமஸ்காரம் தொடர்பில் பாடத்திட்டத்தில் இல்லை. நானோ தினமும் சூரியநமஸ்காரம் செய்கின்றேன். அதனால் 'விற்றமின் டி' எனது உடலுக்குக் கிடைக்கப்பெறுகின்றது. இது கால ஓட்டத்தில் நீரிழிவுபோன்ற நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க உதவுகிறது. இங்கு சூரியநமஸ்காரம் ஏன் அவசியம் என்ற அறிவை எனக்கு ஏட்டுக்கல்வி தரவேயில்லை. ஆனாலும் நான் எனது தனிப்பட்ட தேடலின்வழியாக, ஏடுகள் வழியாக அறிந்துகொண்டதோடு மட்டும் நின்றுவிடாது குறித்த செயலை தினமும் ஆற்றுவதன்வழி அதன் நன்மைகளையும் நுகருகின்றேன். ஆனால், இன்று தரம் ஐந்தில் சூரியநமஸ்காரம் தொடர்பில் பாடத்திட்டத்தில் உண்டு. அனைவருக்கும் அது ஏடுகள் மூலம் கற்பிக்கப்படுகின்றது. ஆனால் அதனைத் தினமும் செய்பவர்களாக யாரும் இல்லை.

### ○ பிரயோகமின்றி ஏட்டுக்கல்வியும், ஏட்டுக்கல்வியின்றி பிரயோகமும் முழுமைபெறா

இதனால் அதன் பயனை அவர்களால் நுகரமுடியாதுள்ளது. அதற்காகப் பாடத்திட்டத்தில் வைத்துக் கற்பிப்பதோடு மட்டுமன்றி ஒவ்வொருநாளும் மாணவர்களை அழைத்து சூரிய நமஸ்காரம் செய்விக்காதது பாடசாலையின் பிழையென யாரும் கூறிக்கொண்டுவரமுடியுமா எனில் இல்லைத்தானே. இதேபோலத்தான் நான் படிக்கும்போது உடற்கல்வி என்றொரு பாடமே இல்லை. நானோ முழுநேரமும் மைதானத்திலேயே இருந்தேன். அதன் விளைவு. இன்றுவரை என்னால் திடகாத்திரமாக இயங்க முடிகிறது. இன்றோ உடற்கல்வி என்பது பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஒரு பாடவேளையும் ஒதுக்கப்பட்டு அதன் நன்மைகள் எல்லாம் கற்பிக்கப்படுகிறது. பிள்ளையும் பரீட்சையில் உடற்கல்வியும் சுகாதாரமும் பாடத்தில் திறமைச்சித்தி எடுத்துவிடுகிறான். ஆனால் மைதானத்தில் விளையாட்டுப்போட்டியின்போது மட்டுமே பிரசன்னமாகிறான். சிலர் அதுவும் கிடையாது. இதனால் இன்றைய பிள்ளைகள் 20 வயதிலேயே நோய்வாய்ப்பட்டுபோகின்றார்கள். இதற்காக நாம் பாடசாலையை திட்டமுடியுமா எனில் இல்லைத்தானே. அதேபோலத்தான் உயர்கல்வி நிறுவனங்களும் என்பதை அனைவரும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். பாடசாலையிலாவது கற்பவர்கள் சிறுவர்கள் என்பதால் ஆசிரியரது துணை அவசியம் எனலாம். ஆனால் இங்கு பல்கலைக்கழகத்தில் கற்பவர்களோ சுயமாகச் சிந்தித்து இயங்கக்கூடிய இளைஞர், யுவதிகள் என்பதனையும் நினைவிற்கொள்ளவேண்டும். இவ்வாறான சூழலை நன்கு விளங்கிக்கொள்வீர்களேயானால் ஏட்டிலே கற்பிக்கப்படுவது பிரயோகத்துக்கு உதவாது என்ற முடிவினை நீங்களும் மீள்பார்வை செய்வீர்கள் என்பது எனது நம்பிக்கை.

இங்கு பிரச்சினை எங்குள்ளது என்று கேட்டால் மனப்பாங்கில் தான் உள்ளது. மிகவும் குறுகிய வட்டத்துக்குள் நின்றுகொண்டு எந்த ஒரு சவால்களையும் எதிர்கொள்ளாமல் அனைத்தும் சுலபமாகக் காலடிக்கே வந்துசேரவேண்டுமென்ற எண்ணமே ஓங்கியுள்ளது. 4 வயதுமுதல் ஆரம்பித்து 25 வயதுவரை கல்விகற்றுவிட்டுத் திடீரெனச் சமூகத்தில் விடப்படும்போது அங்கு காணப்படும் பிரச்சினைகளில் இருந்து வெளிவர பலரது மனப்பாங்கு இடம்கொடுப்பதாக இல்லை. அதனாற்றான் வேலையற்ற தன்மையும் வேலையில் திறமையற்ற தன்மையும் ஏற்படுகின்றது.

ஆனாலும் பட்டப்பயில் மாணவர்களுகான கோட்பாட்டு அறிவு மற்றும் பிரயோகத்திறன் என்பவற்றினை ஓரளவிலேனும் கொடுக்கும் முகமாகப் பல்கலைக்கழகமானது பின்வரும் செயற்பாடுகளைச் செய்துள்ளதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

- பல்கலைக்கழக வணிக மையம் என்ற கட்டமைப்பை உருவாக்கி அதன் வழியாக வெளியே உள்ள முதலீட்டாளர்கள். சந்தைப்படுத்துநர்கள் மற்றும் உற்பத்தியாளர்களைப் பல்கலைக்கழக பட்டப்பயில் மாண்வர்களோடு இணைக்கும் செயற்பாட்டை மேற்கொண்டுவருகின்றோம்.
- பல்கலைக்கழக மட்டத்தில் கண்டுபிடிக்கப்படும் பொருள்களுக்கான உரிமச் சான்றிதழைப் பெற்று வழங்குவதன் வாயிலாகக் குறித்த உற்பத்திகளுக்கான உற்பத்தி மற்றும் சந்தை அங்கீகாரத்தைப் பெற்று வழங்குகின்றோம்.
- தொழிற்றுறை நிறுவனங்களுடன் பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டுள்ளோம்.
- வருடாவருடம் கல்விக்கண்காட்சி, தொழிற்றுறைக் கண்காட்சி மற்றும் தொழிற்றுறை நேர்காணல்களையும் ஏற்பாடு செய்கின்றோம்.
- தொழிற்றுறை சார்ந்து அதிகம் வேலையில்லாப் பிரச்சினைக்கு நாடளாவிய ரீதியில் முகங்கொடுக்கும் கலைப்பீட மாணவர்களினது பிரச்சினைகளை இழிவளவாக்கும் நோக்குடன் அவர்களது கலைத்திட்டத்தில் தொழிற்றுறைப் பயிற்சியை ஆறுமாதகாலம் கொண்ட கட்டாய பாடநெறியாக்கியுள்ளதுடன் இந்த ஆண்டுமுதல் கலைப்பீடத்தினரும் தொழிற்றுறைக் கண்காட்சிகளை ஒழுங்கமைத்து நடத்திவருகின்றமை பெரியளவிலான மறுமலர்ச்சியை இந்தப்பட்டதாரிகள் மத்தியில் ஏற்படுத்தும் என்பது திண்ணம்.
- பால்நிலை மையமானது அரசுசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பல சமுதாய மட்டச் செயற்றிட்டங்களை மேற்கொண்டுவருகின்றமை. அந்தத்துறைகள் சார்ந்து மாணவர்களுக்கான சமூக அக்கறையுடனான வெளிப்படுத்துகையை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.
- திறந்த மற்றும் தொலைக்கல்வி மையமானது தொழிற்றுறைசார் கற்கைநெறிகளைக் குறுங்கால அடிப்படையில் வழங்கத் திட்டமிட்டுப் பல கற்கைநெறிகளை வழங்க ஆரம்பித்துள்ளது. இதன்வழி பட்டதாரிகள் அவற்றினைக் கற்றுச் சமகாலத்தில் தொழிற்றுறைசார் தகைமைகளையும் வளர்த்துக்கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளது.
- எமது பல்கலைக்கழகத்தினது பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடங்கள் மிகச்சிறந்த ஆய்வுகூடங்களுடன் தொழிற்றுறைப் பயிற்சிகளை வழங்கித் தொழில் வல்லுநர்களைப் பட்டக்கல்வியைப் பூர்த்திசெய்ய முன்னதாகவே வேலைக்கு இணைக்கும் வகையில் வினைத்திறனாகச் செயற்பட்டுவருகின்றது.
- இணைந்த சுகாதார விஞ்ஞானபீடம் வாயிலாகத் தொழில்வாண்மைக் கற்கைநெறிகள் பட்டக்கல்வி மட்டத்தில் வழங்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறாகப் பலவிடயங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், முக்கியமான விடயம் யாதெனில் ஒரு பட்டதாரியின் பட்டத்தின் பின்னரான தொழில் முனைவு என்பது அவர்களது மனப்பாங்கு சார்ந்த விடயங்களாற் பெரிதும் கட்டமைக்கப்படுகின்றது என்பதனை அனைவரும் உணர்ந்துகொள்ளல் வேண்டும். அதிலும் குறிப்பாகக் குடும்ப மட்டத்தில்

*(மறுபக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படக்கூடிய மனப்பாங்கு மாற்றமே அந்தப்பிரச்சினையிலிருந்து பட்டதாரிகளை விடுவிக்கும்.

ஆகவே மீண்டும் வலியுறுத்திச் சொல்கின்ற விடயம் யாதெனில் ஏட்டுக்கல்வி என்பது இன்றிப் பிரயோகம் முழுமைபெறாது. அதேபோன்று பிரயோக அனுபவமின்றி ஏட்டுக்கல்வியும் முழுமைபெறாது. ஒரு பல்கலைக்கழகமாக ஏட்டுக்கல்வியின்வழி அறிவு மற்றும் திறன் விருத்திக்குத் தேவையான அனைத்தும் எமது பல்கலைக்கழகத்தில் வழங்கப்படுவதுடன் வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கும் செயன்முறைகளும் தொடர்ச்சியாகச் சமூகப்பொறுப்புணர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**கே: அண்மையில் யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தை தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மையின மாணவர்களின் கைகளுக்குச் சென்றுவிட்டதாக ஆதங்கப்பட்டிருந்தார். இது குறித்து ...?**

ப: இது காலத்துக்கு உகந்த மிகவும் நல்லதொரு கேள்வி. நம்முடைய சமுதாயம் சிந்திக்க வேண்டிய ஒரு ஆழமான விடயம் இதற்குள் பொதிந்துள்ளது.

புள்ளிவிவரங்களை எடுத்து நோக்குவீர்களாயின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் வருடாந்தம் 500 தொடக்கம் 530 வரையான மாணவர்களை உள்வாங்குகிறது. இவர்கள் அனைவரும் -சட்டத்துறைக்கு அனுமதி பெறுவோரில் சிலரைத்தவிர- தமிழ் பேசும் மாணவர்களே. ஏனைய பத்துப் பீடங்களும் சேர்ந்து அண்ணளவாக 3000 மாணவர்களை வருடாந்தம் உள்வாங்குகின்றன. ஏனைய பீடங்கள் எனும்போது குறிப்பாக ஸ்ரெம் (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம்) கல்வியை நோக்காகக் கொண்ட பீடங்களுக்கு அதிகம் சகோதர மொழி பேசும் மாணவர்களே வருகின்றார்கள். இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதி முறையினால் ஏற்பட்ட மாற்றம் அல்ல என்பதனை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். அதனைத் தெளிவாகப் புரியவேண்டுமாயின் பின்வரும் விடயங்களை உன்னிப்பாகக் கவனியுங்கள்.

கடந்த வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில், இணைந்தகணித பாடத்துக்கு 42,000 மாணவர்கள் தோற்றியிருந்தார்கள். அவர்களுள் 36,000 மாணவர்கள் சகோதர மொழியில் தோற்றியிருக்க மிகுதி 6,000 மாணவர்களே தமிழ் மொழியில் தோற்றியிருந்தார்கள். இது 6:1 என்கின்ற விகிதாசாரமாகும். அதாவது சகோதரமொழி பேசுகின்ற ஆறுபேர் தோற்றிய இடத்தில் தமிழ்மொழி பேசியோர் ஒருவர் என்ற விகிதாசாரத்திலேயே பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களுள் சித்தியடைந்த விகிதாசாரமும் இதையொத்ததாகவே காணப்படுகின்றது. வருடாவருடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், விஞ்ஞான பீடத்துக்கு அனுமதிக்கின்ற மாணவர்கள் ஒதுக்கீடு ஏறத்தாழ 300 ஆகும். ஆனால் அந்த 300 இல் 150 மாணவர்களைக் கூடத் தரமுடியாத நிலையில் எமது பிராந்தியங்களின் தேர்ச்சி நிலை காணப்படுகின்றது . இதனால் எஞ்சிய 150 மாணவர் ஒதுக்கங்களையும் நிரப்புவதற்குத் தகுதியுடன் விண்ணப்பித்த சகோதரமொழிமூல மாணவர்களையே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமிக்கும் என்பது தானே முறைமை. இவை ஒருபுறமிருக்க, தமிழ்மொழிமூல மாணவர்களில் பலர் பொறியியல் அல்லது மருத்துவத் துறைகளுக்கான அனுமதி கிடைக்காதபோது அரச பல்கலைக்கழகத்தில் அனுமதிபெறத் தகுதி இருந்தும்கூடத் தனியார் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தொழிற்கல்விப் பட்டங்கள் பெற முனைவதால் எமது பல்கலைக்கழகத்துக்குத் தமிழ் மாணவர்களின் வருகை மிகக் குறைவாகவே உள்ளது. சகோதர மொழிமாணவர்களது வருகையுடன் தமிழ்மொழிமூல மாணவர்களின் வருகையை ஒப்பிடுமிடத்து ஏறத்தாழ 4:1 என்ற விகிதாசாரத்திலேயே அது காணப்படுகின்றது என்பதே நிதர்சனம்.

மேலும் யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களில் தீவகம் மற்றும் வலிகாமம் ஆகிய இரண்டு கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஸ்ரெம் கல்வியைத் தேர்ந்தெடுப்பதென்பது ஒப்பீட்டளவில் மிகமிகக் குறைவாகக் காணப்படுகின்றது. அதிலும் தீவகவலயத்தில் மாணவர்களும் எண்ணிக்கையில் குறைவு, அதேசமயம் ஸ்ரெம் பாடங்களைத் தெரிவு செய்வோர் மிக மிகக் குறைவு என்பதே கசப்பான உண்மை.

இவை அனைத்துக்கும் மேலாக நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் நலிவடைந்து செல்வதும் கருத்திற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

இவ்வாறான சனத்தொகை விகிதாசாரம், பாடத்தெரிவு விகிதாசாரம், பரீட்சைக்குத் தோற்றும் விகிதாசாரம், சித்திபெறும் விகிதாசாரம், அரச பல்கலைக்கழகத்துக்கு விரும்பிவரும் விகிதாசாரம் அனைத்தையும் ஒருங்கே வைத்துப் பார்ப்போமானால் தமிழ்மூல மாணவர்களின் எண்ணிக்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குறைவாகக் காணப்படுவதற்கான உண்மை காரணம் புலப்படும்.

இந்நிலை மாறவேண்டுமாயின் தமிழ்மூல சமுதாயங்களின் மனப்பாங்கு மாற்றம் என்பது மிகப்பெரியளவில் இடம்பெற வேண்டும். குறிப்பாக ஸ்ரெம் பாடங்களைக் கற்க முன்வர வேண்டும். பொறியியல் மற்றும் மருத்துவம் மட்டுமே ஒரே வழி என்ற சிந்தனை மாற்றமடைதல் வேண்டும். அரச பல்கலைக் கழகங்களை விடத் தனியார் பல்கலைக்கழகங்களை நோக்கிப் பணம்கொடுத்துக் கற்கச்செல்கின்ற நிலை மீளாய்வுக்குட்படுத்தப்படல் வேண்டும். மேலும் சனத்தொகைப் பரம்பலில் மீள் கட்டமைப்புருவாக்கம் இடம்பெறவேண்டும். இவை இடம்பெற்றாலேயே தற்போது ஏற்பட்டுள்ள நிலையிலிருந்து ஒரு அரச பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மீண்டுவர இயலும். அது எமது சமூகத்தின் கைகளில் உள்ள விடயமே தவிரப் பல்கலைக்கழகம் சார்ந்து தீர்வளிக்கப்படக்கூடிய விடயமன்று என்பதே மேற்படி ஆதாரங்கள் வாயிலாக என்னால் சொல்லக்கூடியது.

**கே: நீங்கள் துணைவேந்தராகப் பணியாற்றிய முதலாவது பதவிக்காலத்தில் உங்களுக்கு மன நிறைவைத் தந்த விடயம் எதுவென நினைக்கிறீர்கள்?**

ப: இதுவரை இரண்டு, நான்கு மற்றும் ஆறாவது வினாக்களுக்குக் கூறிய பதில்களில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு விடயங்களின் பால் நான் மிகவும் திறம்பட சேவையாற்றியதாகவே எண்ணி மனநிறைவடைகின்றேன். இவற்றைவிட மேலாகவும் பல விடயங்களைச் செவ்வனே ஆற்றிச் சிறந்த விளைவுகளைத் தற்போது அறுவடை செய்து கொண்டிருப்பதையும் எண்ணி மனநிறைவடைகின்றேன். அவற்றுள் சில :


- பல்கலைக்கழகம் என்பது ஒரு சமூகத்தின் அடையாளம். அத்தகையதொரு பல்கலைக்கழகம் அதனது கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் உண்மையாகவும், நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் ஈடுபடுவது அவசியமானதொன்றாகும். அதற்கேற்றாற்போல் தகுதியானதும் திறமையானதுமான வள ஆளணி உள்வாங்கல் முதலாவது பதவிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டமை மிகுந்த மன நிறைவைத் தந்ததொரு விடயம். பல்கலைக்கழகத்தில் மிக நீண்ட காலமாக, கிட்டத்திட்ட ஒன்பது வருடங்களுக்கு மேலாகத், திட்டமிட்டுப் பிற்போடப்பட்டு வந்த பல பதவி நிலைகளுக்குத் தகுதியான பலர் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். விரிவுரையாளர் பதவிக்குத் தேவையான சகல தகுதிகள் இருந்தும் பல தடவைகள் நேர்முகப் பரீட்சைகளின்போது வேண்டுமென்றே உள்நோக்கங்களுடன் புறக்கணிக்கப்பட்ட பலர் உள்வாங்கப்பட்டனர். எந்தவிதமான அழுத்தங்கள், செல்வாக்குகளுமின்றி நேர்த்தியான முறையில் நியமனங்கள் இடம்பெற்றன. போதனைசார் (112) மற்றும் போதனைசாரா (105) பதவிகளில் பெரும்பாலான வெற்றிடங்கள் எனது முதலாவது சேவைக்காலத்தில் நிரப்பப்பட்டமை.
- நான் தாபக பீடாதிபதியாக இருந்து ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்பப் பீடத்தில் இருந்து எனது முதலாவது பதவிக் காலத்தினுள் இரண்டு தொகுதி பட்டதாரிகள் தமது கற்கை நெறிகளை முழுத்து வெளியேறியிருந்தமை.
- ஏறத்தாழ ஆயிரம் மாணவர்களுடன் கலைப்பீடத்தின் கீழ் இராமநாதன் நுண்கலைக்கழகமாக இயங்கி வந்த நுண்கலைக் கல்வி நிறுவனம் 'சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகை மற்றும் கட்புலக் கலைகள் பீடம்' எனத் தரமுயர்த்தப்பட்டதுடன் அதன் பௌதீக வளங்களும் மேம்படுத்தப்பட்டமை. சம நேரத்தில் சுமார் ஆறு கற்கைத்துறைகள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை.
- கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவத்துறை மிக விரைவில் 'சித்த வைத்திய பீடம்' எனப் பிரகடனப்படுத்தப்படவுள்ளது. அதற்கான சகல முன்னாயத்த நடவடிக்கைகளும் நிறைவு பெற்றுள்ளமை.
- ஆய்வு மற்றும் கல்வி நடவடிக்கைகளின் மேம்பாட்டுக்காக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல தொழில் வாண்மை விருத்தி மற்றும் தொழிற்றுறை நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளமை.
- உலக வங்கியின் நிதிப்பங்களிப்பின்கீழ் விஞ்ஞானபீடத்தில் உள்ள கணினி விஞ்ஞானத்துறைக்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டு குறித்த துறை புதிய கட்டடத்தொகுதியில் இயங்க ஆரம்பித்துள்ளது. அதேபோன்று அண்ணளவாக இரண்டு பில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த உலக வங்கி நிறுவனத்தின் அனுசரணையுடன் கலைப்பீடம், விஞ்ஞானபீடம், முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், விவசாயபீடம், பொறியியற்பீடம், தொழில்நுட்பபீடம் மற்றும் மருத்துவபீடம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.
- 'யூஸ்' எனும் ஒரு பிரதான ஆய்வுமாநாட்டுக் கட்டமைப்பின் கீழ் ஒவ்வொரு பீடம்சார்ந்தும் ஆய்வுமாநாடுகளை ஒருங்கிணைத்திருந்தமை.

இவை போன்ற இன்னும் பற்பல விடயங்கள் எனது முதலாவது துணைவேந்தர் பதவிக்காலத்தில் எனக்கு மனநிறைவைத் தந்த விடயங்களாகக் காணப்படுகின்றன.

**கே: நீங்கள் இரண்டாவது தடவையாகத் துணை வேந்தராகத் தெரிவுசெய்யப்பட்ட செய்தி வந்தவுடனேயே, முன்னர் ஒருபோதும் யாழ்.பல்கலைக்கழகத்தில் இல்லாதவகையில், முதல்முறையாக மாணவர்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தப் பட்டாசுகளை கொளுத்திக் கொண்டாடியிருந்தனர். அப்படி மாணவர்களின் துணைவேந்தராக அவர்களின் மனங்களில் இடம்பிடிக்கக் காரணம் என்ன?**

ப: இந்த வினாவுக்கான பதிலை நீங்கள் மாணவர்களிடம் தான் கேட்கவேண்டும்.

நான் ஒரு துணைவேந்தராக ஒருபுறம் எனக்கு விதிக்கப்பட்ட கடமையைப் பொறுப்புடன் உணர்ந்தும் மறுபுறம் மாணவர்களின் நிலைமை அறிந்தும் செயற்பட்டிருந்தேன் என்பதில் எனக்கு பூரண திருப்தி காணப்படுகின்றது.



சிலசமயம் அவ்வாறான திருப்தியை அவர்களும் உணர்கிறார்களோ என்னவோ.

இவ்வாறான ஒரு வினாவைத் தாங்கள் வினாவியதனால் மாணவர்கள் தொடர்பில் சில விடயங்களை இங்கு பகிரலாம் என எண்ணுகிறேன். எமது பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில் அனுமதி பெறுபவர்களில் 95 விழுக்காட்டுக்கும் மேற்பட்டோர் முதலாம் தலைமுறைப் பட்டப்பயில் மாணவர்களே என்பதை நாம் அனைவரும் மனதிற்கொள்ள வேண்டும். அவர்கள் மிகவும் நிதானத்துடனும், கண்ணியத்துடனும் கையாளப்படவேண்டியவர்கள் என்பதும் முக்கியமானது.

ஒரு முதலாம் தலைமுறைப் பட்டதாரி ஏன் அவ்வளவு முக்கியம் என நீங்கள் கேட்கமுடியும்? உண்மையில் அவர்களது பரம்பரையில் பல்கலைக்கழக வருகை என்பது பெரும் கொண்டாட்டமாகவே பார்க்கப்படும். அதுவரை நாளும் தந்தையினுடைய சொல்லையோ அல்லது தாயினுடைய சொல்லையோ முன்னிலைப் படுத்திவந்த குடும்பம் முதல் முதல் இவர்களின் சொல்லைக் கேட்டு முடிவெடுக்க ஆரம்பிக்கும். இவர்களுக்கு இளைய சகோதரர்கள் காணப்பட்டால் அவர்களுக்கெல்லாம் இவர்கள் தான் முன்னுதாரணபுருஷர்களாகக் காணப்படுவர். குறிப்பாக இவர்கள் கல்விகற்ற பாடசாலையில் இவர்கள்தான் பல்கலைக்கழகம் வந்த முதல் மாணவர்கள் எனின் அந்தப் பாடசாலையில் கற்கும் அத்தனை மாணவர்களுக்கும் இவர்களே உதாரணபுருஷர்களாகக் காட்டப்படுவர். இத்தனை பொறுப்புகளும் சுமத்தப்பட்ட ஒரு பாத்திரமாகவே இவர்கள் பல்கலைக்கழகத்தில் பட்டம் பயிலுவார்கள். குறித்த இந்தக் கனதியான தன்மையைப் பல சந்தர்ப்பங்களில் இவர்களால் உணரமுடிவதில்லைப்போலும். அதனால்தான் அவர்கள் சில சந்தர்ப்பங்களில் அலட்சியமாகவும் செயற்படத் தயாராகிறார்கள். ஆனால் ஆசிரியர்களாக அதனை நாம் நன்கு உணர்வதோடு மட்டுமல்லாது இவர்களுக்கும் உணர்த்த வேண்டிய பொறுப்பு எமக்கானதே என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. இந்த நிலையில் மாணவர்கள் கருவியாக இருக்கிறார்கள். அவர்களை நன்நெறிப்படுத்தும் கர்த்தாக்களாக ஆசிரியர்களாகிய நாம் மாறிவிடவேண்டும்.

உதாரணமாக, ஒரு காட்டுக்குள் சுற்றுலாச் சென்றவர்கள் காட்டின் அனைத்துப் பகுதியையும் பார்க்கவேண்டுமென்ற ஆவலின் மிகுதியால் அனைத்துத் திசைகளிலும் கட்டவிழ்த்த காளைகள் போல் ஓடித்திரிந்து பார்த்துவிட்டு, 'காட்டைவிட்டு வெளியேற வேண்டும்' என்ற சிந்தனை வரும்போதே, கடைசிநேரத்திலேயே தமக்கான சரியான வழியைத்தேட முற்படுவார்கள். அடர்ந்த காட்டின் மத்தியில் சரியான வழியைக் காண்பது என்பது குதிரைக்கொம்பு. அப்பொழுதுதான் அவர்களுக்குச் சரியான திசையைக்காட்ட ஒரு திசைகாட்டி தேவைப்படுகிறது. திசைகாட்டியின் முக்கியத்துவத்தைக்கூட அப்பொழுதுதான் அவர்கள் உணரத் தொடங்குவார்கள். அந்தத் திசைகாட்டி அவர்களது கைகளை அடைந்ததும் அதன் மீது அதீத நம்பிக்கையை வைத்து அது காட்டும் திசைகளுக்கு ஏற்ப தமது சரியான பாதையை நோக்கி பயணப்பட்டு காட்டில் இருந்து மீண்டுவருவர். இங்கு இரண்டு விடயங்கள் அவர்களது காட்டிலிருந்து மீட்சிக்கான நம்பிக்கையை வீணடிக்க வாய்ப்புண்டு.


ஒன்று அந்தத் திசைகாட்டியின் முக்கியம் அறியாமல் அதை உதாசீனம் செய்துவிட்டுப் பயணத்துக்குச் சென்றிருப்பின் திசைகாட்டியின்மை அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தியிருக்கும்.

இரண்டு - அவர்கள் கொண்டுசென்ற திசைகாட்டி பிரச்சினைக்குரியதாயின் அதைநம்பிப் பயணப்பட்டு ஆபத்தில் மாட்டிக் கொண்டிருப்பர். எனவே காட்டில் விடப்பட்ட ஒருவன் மீண்டுவர வேண்டுமாயின் அவன் கையில் திசைகாட்டி இருப்பது அவசியம் என்றால் அதைவிட அவசியம் குறித்த திசைகாட்டி சரியான திசையைக் காட்டுவதாகவும் இருப்பதாகும்.

இந்த உதாரணத்தின் அடிப்படையில் எமது பல்கலைக்கழக மாணவர்களை உற்று நோக்கிப் பாருங்கள். ஏலவே கூறப்பட்டது போன்று முதலாம் தலைமுறைப் பட்டப்பயில் மாணவர்களாக முதன்முதல் காட்டுக்குள் விடப்பட்டவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் முதன்முதலில் வந்தமையால் காட்டைச் சுற்றிப்பார்க்கும் ஆவல் மிகுதியால் கண்டபடி சுற்றித்திரிபவர்களாகவும் இருக்கலாம். ஆனால் அவர்களது பாதுகாப்பான முன்னேற்றத்துக்கு ஒரு வழிகாட்டும் திசைகாட்டியாக ஆசிரியர் இருக்கவேண்டியது மிகவும் அவசியம் என்பதை அனைவரும் உணர வேண்டும். ஒருகணம் ஆசிரியரை நம்பிப் பயணப்படுபவனுக்குச் சரியான திசையைக் காட்டவேண்டுமென்ற சிந்தை குறித்த ஆசிரியருக்கும் இருக்கவேண்டும். துணைவேந்தராக இருந்தாலும் ஒரு ஆசிரியராக எனது கடமையும் அதுவே என்பதை நான் நன்கறிவேன். இத்தகைய சூழலில் எனது மாணவர்கள் என்னைத் திசைகாட்டியாக ஏற்றார்களோ? அல்லது அவர்களுக்கு நான் சரியான திசையைத்தான் காட்டிவருகின்றேனோ? என்பதனை அவர்களிடம் தான் கேட்டறிதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்




**வி. கர்ஷிகா,**
தரம் - 7
யா/ வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை.



**அ.கஜீபன்,**
தரம் - 7
யா/ சுந்தரமூர்த்தி நாயனார்
வித்தியாலயம்

**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



**சி.மயூரன்**
தரம் - 9
யா/கரந்தன் இராமுப்பிள்ளை
வித்தியாலயம்



**ச. சதுர்ஷன்**
தரம் - 08
யா/மந்துவில் றோ.க.த.க
பாடசாலை



**ர.சிவஜனனி,**
தரம் - 6F
யா/ வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை.



**பு.ஜீவேந்திரன்**
தரம் - 8
யா/இந்துக் கல்லூரி




**த.அபிசாந்**
தரம் - 7
யா. கொக்குவில்
ஸ்ரீ இராமகிருஸ்ண
வித்தியாசாலை

## நிரப்புவோம்

3 - 1 = 2

2 - 1 =

3 - 2 =

4 - 2 =

3 - 3 =

5 - 4 =



## ஒட்டகத்தின் தண்ணீர் அறை!

ஒட்டகத்தின் இரைப்பையில் 3 அறைகள் உள்ளன. முதல் இரு அறைகளின் சுவர்களில் தனித்தன்மை வாய்ந்த நீர்ச் செல்கள் உள்ளன. இதில்தான் ஒட்டகம் நீரைச் சேமித்து வைக்கிறது. இதோடு, ஒட்டகத்தின் தசைகளிலும் இணைப்புத் திசுக்களிலும் நீர் சேமித்து வைக்கும் அமைப்பு உள்ளது. திமிலில் சேமிக்கப்படும் கொழுப்பு உணவுப் பொருட்களின் மூலம் வளர்சிதை மாற்றம் ஏற்படும். இந்த வளர்சிதை மாற்றம் மூலம் ஒட்டகத்துக்குத் தானாகவே நீர் கிடைத்துவிடும்.

இதை வைத்தே சில வாரங்கள் வரை நீர் அருந்தாமல் ஒட்டகத்தால் தாக்குப்பிடிக்க முடியும். இப்படி மீண்டும் மீண்டும் நீரைச் சேமித்து வைத்துக் கொள்ளவும் ஒட்டகத்தால் முடியும். உடலுக்குள்ளே நீரைத் தேக்கி வைத்துக்கொள்வதால்தான் ஒட்டகத்தைப் 'பாலைவனக் கப்பல்' என்றழைக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையின் விளிம்பில் அன்பு

சஞ்சீவி சிறுகதை

நெடுந்தீவு செ. மகேஷ்



"அது நல்ல கௌரவமான குடும்பம். நீங்கள் பயப்படாமல் கல்யாணம் பேசலாம்!"

இந்த வார்த்தைகளின் கனம் பொருந்திய பரமசிவத்தின் திருமணத்திற்கு நாளைக் குறித்தது. எல்லாமே சிறப்பாக நிறைவேறின.

அமைதியும் அன்பும் அவனிடமிருந்தது.

ஆதரவும் அரவணைப்பும் அவளிடமிருந்தது.

அவர்களின் வாழ்வு இத்தனை விரைவாக வாழ்வின் பல இன்ப துன்பங்களைக் கண்டு கடந்து வந்து விட்டது.

இன்று அவன் ஒரு தனி மரமானான்.

'குடும்பம் ஒரு கதம்பம், குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் '

என்றெல்லாம் பாராட்டுப் பெற்று மகிழ்ந்த நிலை கலைந்து மனைவி, பிள்ளைகள் என்ற கதம்பம் குலைந்து, வேதனை சூழ வெந்து தகிக்கும் மனத்துடன் இன்றைய நாள்கள் கடக்கின்றன.

"வேண்டாம் . அப்பவே சொன்னனாங்கள், வேண்டாம் இந்தக் கலியாணம் செய்து கொண்ட பிள்ளைகளோடும், அவளின் குடும்பத்தோடும் ஒட்டிக் கிடந்து உபத்திரவப்பட வேண்டாம்"

"அதுகள் தங்கட தங்கட பாட்டை தாங்களே பார்த்துக் கொண்டு தனிக் குடித்தனம் போகவிட்டு நீங்கள் விலகி இருக்கிறதுதான் சரி , அதுதான் நல்லது"

என்று பலவாறு பலரும் சொன்னார்கள்

"பெண் பிள்ளைகளோடு கூட்டுக் குடும்பமாய் வாழ்வது தான் பிரச்சனையில்லை" என்றும் சொன்னார்கள்

"உங்கட பேரப்பிள்ளைகளோடு மகளின் பிள்ளைகளோடு வாழ்வதில்தான் எத்தனை மகிழ்ச்சி உண்டு" என்றும் ஆசை காட்டி எமக்கு ஆதரவு தந்தார்கள்.

எல்லோர் கதைகளும் கருத்துகளும் எங்கள் கனவுகளும் மகள் குடும்பத்தோடு மகிழ்ந்திருக்கலாம் என்ற ஆதரவைத் தந்தாலும் அவை அனைத்தையும் பொய்யாக்கி பரமசிவம் இப்பொழுது தனியாளாக மனம நொந்து வாடுகிறார்.

அவருக்கு வயது போய்விட்டது. இத்தனை ஆண்டுகள் கௌரவமாக வாழ்ந்த குடும்பம். இன்று சீர் குலைந்து பலரும் பார்த்துப் பரிகசிக்க இப்படி ஆகிப்போய் விட்டதே என்று மனம் கலங்கினார் பரமசிவம்.

"பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்பது பரமசிவத்தைப் பொறுத்தவகையில் உண்மையாகிப் போனது.

பிள்ளைகளின் வளர்ப்பில் படிப்பில் அவர்கள் தாமாகவே அக்கறை கொண்டு முன்னேறியபோது அவர்களின் உயர்ச்சியில் மகிழ்ந்து போனவர் பரமசிவம்.

தமது பரம்பரையினர் தமது பிள்ளைகள் போலப் படிப்பிலே முன்னேறிய வீரம் சொல்லிப் பெருமை கொண்டவர் பரமசிவம்.



ஒவ்வொரு பிள்ளை குறித்தும் உத்தமரென்றும் உயர்ந்தவரென்றும் ஊர் பேசும்போது மதிப்பின் உச்சாணிக் கொப்பில் கம்பீரமாய் உட்கார்ந்த பெருமை அவரை ஆட்கொண்டது.

எவர்மீதும் பொறாமை கொள்ளாத நல்ல மனம் அவருடையது., பிள்ளைகள் மூவரும் ஒற்றுமையாகத் தங்கள் நன்மை தீமைகளில் கலந்து கொண்டு மகிழ்ந்து கொண்டாடுவது கண்டு மனம் பூரித்தார்.

மனைவியும் ,மகளும் ,பேரனும் பரமசிவத்தை இன்று, ஏன் இப்படி ஊர் தூற்றத் தனித்து வாடப் பணித்தார்கள்?

அவருக்கே அது புதிராகத் தோன்றியது.

சேர்த்த சொத்து சுகங்கள் நிறையவே இருந்தன. சூழ்ந்திருந்த உறவுகளின் மதிப்பும் மரியாதைகளும் அவருக்கு நிறையவே இருந்தன.

அத்தனை பெருமைகளையும் வைத்திருந்தவர் வைத்திருப்பவர் ஏன் இன்று ஓர் அனாதை போலத் தனித்திருந்தார்? அவரின் தனிமை வாழ்வைக் காணும் அவரது இன்றைய அயலவர், அவரை ஏனோ ஏளனமாகப் பார்ப்பதாக அவருக்குத் தெரிந்தது. அவர் பார்க்கும் திசையெல்லாம் தனிமையின் இருள் அவரைப் பயமுறுத்தியது.

அயலவருடன் அன்பும் பணிவும் கொண்டு உறவாடும் பரமசிவம் தனது மனைவி ,பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்துகிறார் என்ற பரப்புரை அவரைச் சற்றே கூனிக் குறுகவே செய்தது. பிள்ளைகள் பொன், பொருள்மீது கொண்ட ஆசையால் ஒருவரோடொருவர் மௌனமாகவே தமது போட்டியை முன்னெடுத்த செய்தி அன்றுதான் அவருக்குத் தெரிய வந்தது.

மனைவியும் தான் அண்டியிருந்த மூத்த மகளின் பக்கமாகவே தனது காய்களை நகர்த்திய மர்மம் தெரிந்தபோது ஆத்திரப்பட்டார்.

ஒவ்வொரு பிள்ளையும் தனக்குத் தனக்கெனத் தன் பிள்ளைகளுக்குப் பொருள் சேர்க்கும் ஆசையில் வீடு, வாசல், காணி, நிலம் யாவற்றையும் பங்கிடத் துடித்தனர். ஆசைகள் மேம்பட்டன. அன்பு சிதைந்தது. மூத்த மகள் தனக்கென வீட்டையும் காணியையும் எழுதி வாங்கிக் கொண்டாள்.

உறங்கிக் கிடந்த இளைய மகள் தனக்கெனக் கேட்ட வீடு, வளவுகள் பரமசிவத்தின் விருப்பப்படியே மூத்த மகளுக்கு எழுதப்பட்டதாகப் புனையப்பட்ட பொய்யை நம்பித் தந்தையோடு அவள் சண்டைக்கு நின்றாள். உறவுகள் சிதையப் பொருளாசை மேலோங்கியது.

எல்லாப் பழியையும் பரமசிவம் தலையில் சுமத்திவிட்டுத் தப்பித்துக் கொள்ள மனைவியும் மூத்தமகளும் தந்திரம் செய்த போது தந்தை ஆத்திரமுற்றார்.

பொன்,பொருள், காணி, வீடு என்று ஆசை பெருக மனைவி பிள்ளைகள், பரமசிவம் மீது காட்டிய அன்பைத் தொலைத்து ஆட்டம் போட்டனர்.

பரமசிவம் தனித்துப்போனார்; தவித்துப் போனார். அன்பில்லா வாழ்விதனில் இத்தனை ஆண்டுகள் மனைவி, பிள்ளைகள் என்று மனங்கொண்டு வாழ்ந்த வாழ்வு பொய் என்பதைக் கண்ட போது துடித்துப் போனார். அவரது அன்பு செறிந்த குடும்ப வாழ்வு ஒரு நொடிப் பொழுதில் சிதறிப் போனது.

தன்னையும் தனது குடும்பத்தையும் மதிப்போடு காக்கத் துடித்த பரமசிவத்தின் எண்ணங்கள் சிதைந்தது கண்டு அதிர்ந்து போனார்

பரமசிவத்தின் மீதே அனைத்துக் குற்றங்குறைகளையும் 'அப்பிச் சோடித்து 'எல்லோருமே புறம் ஒதுங்கிப் போன போது அவர் தனிமரமானார்.

இசை கலந்து பாடும் அவரது குரல் ஒடுங்கிப் போனது. எழில் பெருக்கி வாழ்ந்த அவரின் உடல் சுருங்கிப் போனது குடும்பம் ஒரு கதம்பம் என்று ஊர் போற்ற வாழத் துடித்தவர் தனித்தொதுங்கி அந்தத் தாழ்வாரத்தில் ஒதுங்கிய போது. . .! அவரது ஒரே மகன் அவரின் எதிரில் நின்றான்

"வாருங்கள் அப்பா வீட்டுக்குப் போகலாம்"

சின்ன வயதிலிருந்தே தந்தையின் அன்பைச் சிதற விடாமல் காப்பாற்றி வந்தவன், படித்துப் பட்டம் பெற்றுத் தகுதியான அரச உத்தியோகம் வரை உயர்ந்தபோது இனம் மாறி ,மதம் மாறிக் காதலித்துக் கலியாணம் செய்ததால் ஒதுங்கிப் போனவன், ஒதுக்கி வைக்கப்பட்டவன் அவன் . நல்ல சீதனம் வாங்கிக் கொண்டு தங்கள் சாதிக்குள் உயர்ந்த இடத்தில் அவனுக்குக் கலியாணம் செய்யத் திட்டமிட்டிருந்தவர் பரமசிவம்.

அவரின் மனத்தில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டான் என்று கலங்கி ஏசி, அவர் துடித்தபோது அன்புக்கு முதலிடந் தந்து ஆசையை விலக்கி சீதனமே வாங்காமல ஓர் ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு ஒதுங்கிப் போனவன் இன்று அவரின் எதிரில்.

பரமசிவத்தார் கண்கலங்கி அழுதார்.

அன்பு கொண்ட நெஞ்சங்களே ஆறுதல் தரும் என்பதும் அமைதியைக் குலைக்கின்ற ஆசைகளை விலக்கி நடந்தால் ஆனந்தம் நிலைக்கும் என்பதும்

பரமசிவம் இன்று பெற்ற அனுபவமாகும். ■




உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்ணாடி வீடு - 3

○ ரஜிதா அரிச்சந்திரன்

முதல்நாளிரவு ஷோபாவை மீட்டு, ஹொஸ்ரலில் சேர்த்த அசதியோடு தூங்கிக் கொண்டிருந்த அசோக்கை அம்மாவின் குரல் பதை பதைத்து எழ வைத்தது.

" தம்பி, பக்கத்து விட்டுக் குழந்தை கிணத்துக்க விழுந்திட்டுதாம். அவைக்குக் கொரோனா எண்டு ஒருத்தரும் காப்பாத்தப் போகேலையாம். அந்த மனுசி கத்திக்குழறுது. ஒருக்காப் போய்ப் பாரப்பு" தாய் சொன்னவுடன் ஓடிச் சென்றான் அசோக்.

அங்கே கிணற்றுக்குள் இறங்கி குழந்தை மூழ்கிக் கொண்டிருந்தது. எதைப்பற்றியும் யோசிக்காமல் கிணற்றுக்குள் குதித்தான். நீண்ட போராட்டத்தின் பின்னர் குழந்தையோடு மேலே வந்தான். குழந்தையைக் காப்பாற்றி வந்த அசோக்கின் காலில் விழாத குறையாக நன்றி சொன்னாள் குழந்தையின் தாய்.


வீட்டுக்கு வந்த அசோக் " அம்மா ஏன் எங்கட சனம் இப்பிடி இருக்குது? ஒரு உயிரை காப்பாற்றுவதைத் தவிர வேறென்ன மகிழ்ச்சி இருக்கப்போகிறது? " என்று கூறினான். தாயும் ஆமோதிப்பதுபோல தலையசைத்தாள்.

"ஏனம்மா பேசாமலிருக்கிறாய்?"

"தம்பி எனக்கும் கொஞ்சம் பயமாக இருக்கிறது. இரக்கத்தினால் உன்னை பக்கத்துவீட்டுக்கு அனுப்பிவிட்டேன்.ஆனாலும் இப்ப நினைக்கையில்.. " என்று இழுத்தவளை "ஏனம்மா எனக்கு கொரோனா வந்துவிடுமென்று பயப்படுகிறீர்களா? எனக்கொன்றும் வராது . நான் ஹெல்த்தியாக இருக்கிறேன்" என்று கூறிய அசோக்கை ரீ.வி. நியூஸ் திரும்பிப் பார்க்க வைத்தது.

'யாழில் உயர் அலுவலகம் ஒன்றில் வேலை பார்க்கும் ஆனந்தி அதே அலுவலகத்தில் வேலைபுரியும் தன் கள்ளக்காதலன் சுதாவினை அடித்துக் கொலை செய்தாள்' என்ற நியூஸைக் கேட்டவனுக்கு தலை சுற்றியது.

'ஐயோ! இந்தப் பிரச்சினையால தான் ஷோபா அநாதரவாய் நின்றாளா?' என இரங்கினான். "எனினும் நான் அவளிடம் கேட்கப்போவதில்லை. அவள் எப்போது இதைப்பற்றி சொல்கிறாளோ அப்போது சொல்லட்டும்' என தனக்குள் கூறியவாறு, 'அக்கினிச் சிறகாய்' என்ற கவிதைப்புத்தகத்தின் கவிதையினை சத்தமாக வாசிக்கத் தொடங்கினான்.




▣ ▣ ▣ ▣ ▣

இதே நியூஸை ஷோபாவும் பார்த்தாள். அவளுக்கு குற்றவுணர்வு தலைக்கேறி என்ன செய்வதென்று புரியவில்லை. அசோக்குக்கு போன் எடுத்தாள். "அசோக் நான் உன்னைச் சந்திக்கவேண்டும், உடனே வரமுடியுமா?" என்று கேட்டாள்.

"சரி ஷோபா. நான் வாறன்"

பதினைந்தாவது நிமிடத்தில் அந்த மகளிர் காப்பகத்தின் வரவேற்புப் பகுதிக்கு வந்துவிட்டான் அசோக்.

"வெளியில போய்க் கதைப்பமா?" என்று ஷோபா கேட்டதும், அசோக்கின் மனதில் பல கேள்விகள் எழுந்தது. ஆனாலும் ஒன்றும் கேட்காமல்,

"வா போகலாம்" எனக் கூட்டிச் சென்றான். இருவரும் ஒரு கோயிலுக்குச் சென்றார்கள். கோயிலின் மரத்தின் கீழமர்ந்து கோயிலின் அழகை ரசித்தவனை,

"அசோக் ! நான் ஒன்று சொல்லவேண்டும்.." என்று இழுத்தவளை, "சொல்லு ஷோபா. நான் ஒன்றும் நினைக்கமாட்டேன்" என்று தைரியம் கொடுத்தான் அசோக். ஒருகணம் நிதானித்துவிட்டு, ஷோபா தன்வீட்டில் நடந்த சம்பவங்கள் எல்லாம் அவனுக்குக் கூறி அழுதாள். "ஷோபா அழாதே. எனக்கு இதெல்லாம் தெரியும். உனக்கெந்தக் குற்றஉணர்வும் வேண்டாம். உன் அம்மா தான் செய்த தவறுக்கு பரிகாரம் தேடியிருக்கிறா. நீ எந்தக் கவலையுமின்றி வாழலாம். இப்பவா ஹொஸ்ரலுக்கு போகலாம்" எனக் கூறி அவளை ஹொஸ்ரலில் விட்டுச் சென்றான்.

▣ ▣ ▣ ▣ ▣

லண்டன். நேரம் மாலை 5.00 மணி.

ரீ.வி.க்கு முன்னால் உட்கார்ந்த ஆனந்தியின் அக்கா விக்னேஸுக்கு பேரதிர்ச்சி.

"தம்பி முகேஸ், ஆனந்திச் சித்தி யாரையோ கொலை செய்திட்டாளாம். ரீ.வில சொல்லுறாங்கள். "

" அம்மா பொறுங்கோ நான் ஷோபாக்கு கோல் எடுக்கிறன்" என்று சொல்லிவிட்டு, உடனேயே போன் எடுத்தான் முகேஸ். ஆனாலும் போன் வேலை செய்யவில்லை.

"அம்மா போன் வேலை செய்யவில்லை. என்ன செய்ய?"

" தம்பி என்ர டயறியை எடுத்துக்கொண்டு வா. அதில கமலாக்கா எண்டு இருக்கிற நம்பருக்கு போன் எடு"

தாய் சொன்னபடி முகேஸ் போன் எடுத்தான்.

"ஹலோ யார் கதைக்கிறது?" மறுமுனையில் குரல் கேட்கவும், போனைத் தாயிடம் கொடுத்தான்.

"கமலாக்கா நான் விக்னேஸ் கதைக்கிறன். ஆனந்திக்கென்ன நடந்தது?" எனக் கேட்கவும் கமலா கத்த ஆரம்பித்தாள்.

"ஐயோ விக்னேஸ், இவளுக்கு எவ்வளவு புத்திமதி சொன்னேன். கேட்டாளா? யாரோ சுதாவாம். அவனோட ஆட்டம் போட்டு குடும்ப மானத்தையே தொலைச்சுப்போட்டாளே "

" சரி அக்கா, ஷோபா எங்க?"

"அவளைக் காணேல்ல விக்னேஸ். நானும் தேடிக்கொண்டிருக்கிறன். அந்த அலுவலாத் தான் நான் பொலிஸுக்குப் போறேன். போட்டு வந்து கோல் பண்ணுறன்" "சரி அக்கா கோல் பண்ணு நான் பார்த்திட்டு இருப்பன்"

▣ ▣ ▣ ▣ ▣

பொலிஸ் ஸ்ரேசன் போவதற்காக ஓட்டோ ஒன்றை கையசைத்து நிப்பாட்டினாள்.

"தம்பி கோப்பாய் பொலிஸுக்கு போடாப்பா"

"அம்மா பெற்றோல் எல்லாம் விலை. உங்களுக்கெண்டபடியால் 500 ரூபாக்கு வாறன்"

" சரி, தாறன் போ" என்றாள். ஓட்டோ விரைந்து பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்னால் நின்றது.

பொலிஸ் ஸ்ரேசனுக்குள் ஒரே சத்தம், நிறைய சனம். அங்குமிங்கும் அலைந்து திரிந்தார்கள். பொலிஸ்காரர் தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருந்தார்கள். இவளுக்குப் பொறுக்கவில்லை. எழும்பிப் போய்

" வணக்கம் சேர், அண்டைக்கு கோப்பாயில் கொலைக்கேஸில ஒரு பொம்பிளையைக் கைது செய்தனீங்கள் தானே. அவள்ர மகளைக் காணல அது தான் விவரம் கேக்க வந்தன்" என்று சொன்னாள்.

"அப்படியா அது எவனோட போட்டுதோ தெரியாது. நாங்கள் விசாரிக்கிறம். எதுக்கும் ஒரு கொம்பிளைன்ட் கொடுத்துப்போட்டு போங்கோ" என்றான் பொலிஸ்.

முறைப்பாடு செய்துவிட்டு வெளியில் வந்து, ஓட்டோவில் ஏறினாள். வீட்டுக்குப் போனதும் " எவ்வளவு தம்பி?" என்று கேட்டாள்.

"1500 ரூபா தாங்கோ " என்றான்.

"என்ன தம்பி போகேக்க 500 சொன்னனீ"

"இல்லையம்மா எவ்வளவு நேரம் நான் உங்களுக்காக வெயிட் பண்ணினனான். அந்த நேரம் நான் வேற ஓட்டங்கள் ஏதும் ஓடினால் எனக்கு எவ்வளவு கிடைச்சிருக்கும்? இண்டைக்கு அரிசியே 350 ரூபா. நானும் குடும்பஸ்தன். என்ர வயித்தில அடிக்காதைங்கோ" என்று அவன் பிரசங்கம் செய்யத் தொடங்கினான்.

"சரி தம்பி, இந்தா! எல்லாம் இந்தப் பாழாப் போன கொரோனாவால வந்தது" எனக் கூறிக் கொண்டே உள்ளே வந்தாள் கமலா. அவள் தேடிக் கொண்டிருந்த ஷோபாவுக்கோ இன்னொரு பிரச்சினை எதிர்பாராத ரூபத்தில் வந்துகொண்டிருந்தது.

(தொடரும்)




# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

### 1945 மார்ச் 28

பிரிட்டிஷ் ஆட்சியில் இந்திய ஆளுநராகப் பதவி வகித்தவர் மவுண்பேர்ட்டன் பிரபு. இரண்டாம் உலகயுத்தம் நடைபெற்ற வேளையில் மவுண்பேர்ட்டன் பிரபு. பிரிட்டனின் தென்கிழக்காசியப் படைத் தளபதியாகக் கடமையாற்றினார்.28.3.1945 அன்று மவுண்பேர்ட்டனின் பாரியார் லேடி மவுண்பேர்ட்டன் விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியின் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்தார்.

### 1945 மே 13

இரண்டாம் உலகயுத்தம் முடிந்து பிரிட்டன் வெற்றி பெற்றதை யிட்டு உடுவில் மகளிர் கல்லூரி தேவாலயத்தில் விசேட வழிபாடு நடைபெற்றது.

### 1945 செப்ரெம்பர்

குறைந்த சாதியினரை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை சட்டசபையில் தமக்கு மூன்று பிரதிநிதித்துவம் வேண்டுமென சோல்பரி ஆணைக்குழுவுக்கு மகஜர் அனுப்பியது.

### 1945 ஒக்ரோபர் 09

சோல்பரி அறிக்கை வெளியிடப்பட்டது.

ஜி.ஜி.யின் சமபல பிரதிநிதித்துவக்கோரிக்கை சோல்பரி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

சோல்பரி அறிக்கையின் பிரகாரம் இலங்கை நாடாளுமன்றம் இரண்டு சபைகளைக் கொண்டிருக்கும். 101 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களில் 95 பேர் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர், 6 பேர் ஆளுநரால் நியமிக்கப்படுவர். செனட் சபைக்கு 30 பேர் தெரிவு செய்யப்படுவர். இவர்களில் 15 பேர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாயிருப்பர். 15 பேர் ஆளுநரால் நியமிக்கப்படுவர். பிரதமர் ஆளுநரால் நியமிக்கப்படுவார். ஏனைய அமைச்சர்களை பிரதமரும் ஆளுநரும் இணைந்து நியமிப்பார்கள்.

### 1945 நவம்பர் 09

செல்வநாயகம் தலைமையில் இலங்கை தேசிய காங்கிரஸ் , சோல்பரி அறிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்து கொழும்பு நகரமண்டபத்தில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்தது. இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய செல்வநாயகம் சோல்பரியும் பிரிட்டிஷ் அரசாங்கமும் தமிழர்களுக்கு அநீதி இழைத்து விட்டதாகக் கண்டனம் தெரிவித்தார்.வெள்ளவத்தையிலும் இலங்கை தேசிய காங்கிரஸ் கூட்டமொன்று நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய டாக்டர் இரத்தினபாலா சோல்பரி அறிக்கையை நிராகரிப்பதாகத் தெரிவித்தார்.

### 1945 நவம்பர் 09

கொழும்பு அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு.V.குமாரசாமி மலாயாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டார். இந்தப்பதவிக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் C.S.குமாரசாமியை நியமித்தபோது அவர் ஏற்க மறுத்துவிட்டார்.

### 1945 நவம்பர்

வர்த்தகக் கைத்தொழிலமைச்சர் கொரியாவின் சிமெந்துத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு காங்கேசன்துறையில் இடம் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 85 இலட்சம் ரூபா தேவையெனவும் சட்டசபையில் பிரேரணையொன்றைக் கொண்டு வந்தார்.

கணிதப்பேராசிரியர் எலியேசர், கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றார்.

### 1945 டிசெம்பர்

கட்டுவனில் விமான விபத்து

நான்கு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட லிபரேட்டர் விமானமொன்று பலாலியில் தரையிறங்கிய வேளையில் கட்டுவனில் பனங்கூடலுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் பயணம் செய்த எட்டுப்பேரில் ஆறு பேர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1882: மானிப்பாய் மருத்துவக் கல்லூரியின் இறுதி நாள்கள்



மருத்துவர் மில்ரோய் போல்

○ பா. துவாரகன்

அமெரிக்க இலங்கை மிசனரியினர் (ACM) 1879 ஆம் ஆண்டின் காலாண்டுக் கூட்டத்தொடர் ஒன்றில் மானிப்பாய் மருத்துவக் கல்லூரி தொடர்பில் சில தீர்மானங்களை மேற்கொண்டனர். அதிலே மருத்துவக் கல்லூரிக்கு ஒரு வகுப்பில் ஆகக் கூடுதலாக 15 மாணவர்களையே அனுமதிப்பதென்றும் ஒவ்வொரு மாணவரிடமும் மாதாந்தம் 3 ரூபாவைப் பள்ளிக் கட்டணமாக அறவிடுவதென்றும் தீர்மானித்தனர்.

இதற்கமைய ஒவ்வொரு மாணவரும் வகுப்பில் அனுமதிக்கப்படும் போது முற்பணமாக 25 ரூபாவைக் கட்டணமாகச் செலுத்துமாறு கேட்கப்பட்டனர். இந்நிபந்தனைகளுக்கு அமைவாக கிறீனது மருத்துவக் கல்லூரியின் 11 ஆவது அணியில் பயில்வதற்கு 15 பேர் உள்வாங்கப்பட்டனர். இவர்களே அமெரிக்க மிசனரி மருத்துவர் கிறீன் ஆரம்பித்த மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் பயின்ற கடைசி மாணவர் அணியினர். மருத்துவர் சி.ரி. மில்ஸ், மருத்துவர் உ.வில்லியம் தில்லையம்பலம் போல் மற்றும் மருத்துவர் கிளைவ்ஸ் ஆகியோர் இம் மாணவர்களுக்கு மருத்துவம் கற்பித்தனர். இவர்கள் அனைவரும் தமிழர்களே.

1881 ஆம் ஆண்டு சனவரி மாதம் லீச் சகோதரிகள் என்று அழைக்கப்படும் மேரி லீச் மற்றும் மார்கிறெட் லீச் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் அமெரிக்க இலங்கை மிசனுக்காகப் பணியாற்ற வந்தனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் 7 ஆண்டுகள் பணியாற்றினர். இவர்கள் வடபகுதி மருத்துவத்துறைக்கு ஆற்றியபணி அளவிடற்கரியது. சகோதரிகள் இருவரும் இங்கிலாந்து, ஸ்கொட்லாண்ட்,

## யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 26
### சில குறிப்புக்கள்

மற்றும் அமெரிக்காவில் மிகப்பெரியளவில் நிதி திரட்டினர். இந்நிதியின் மூலம் மானிப்பாய் மருத்துவமனையின் விரிவாக்கத்துக்கும் இணுவிலில் அமைந்துள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான மக்லியோட் மருத்துவமனையை நிறுவுவதற்கும் இம் மருத்துவமனைகளில் மருத்துவ மிசனரிகளைக் கடமையில் ஈடுபடுத்தவும் இவர்கள் காரண கர்த்தாக்களாக விளங்கினர். 1882 ஆண்டு கிறீன் உருவாக்கிய மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் பயின்ற 11 ஆவது அணியினர் தமது மருத்துவக் கல்வியை நிறைவு செய்தனர். இவர்கள் தமிழ்மொழி மூலம் மருத்துவம் பயின்ற 6 ஆவது அணியினர்.

1882 ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க இலங்கை மிசனது காலாண்டுக் கூட்டத்தின் அறிக்கையில் பிரித்தானிய அரசாங்கம் அனுப்பிய கடிதம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இக்கடிதத்திலே அமெரிக்க மிசனரிகளின் மானிப்பாய் மருத்துவக் கல்லூரிக்கு பிரித்தானிய அரசாங்கம் ஆண்டுதோறும் வழங்கி வந்த நிதியை 1000 ரூபாவால் குறைக்கும் முடிவை எடுத்திருப்பதையும் அதன்பின்னர் 1883 முதல் இந்நிதியை முற்றாக நிறுத்தும் முடிவை அறிவித்திருப்பதையும் அறிக்கையில் தெரிவித்தனர். மேலும் இந்தக் கூட்டத்திலே மானிப்பாய் மருத்துவக் கல்லூரியை நடத்துவதற்கு அமெரிக்காவிலிருந்து மருத்துவர் ஒருவரை அழைக்க இலங்கை அமெரிக்க மிசன் எடுக்கும் முயற்சியை கைவிடுவதென்றும் மருத்துவ மாணவர்களுக்கான வகுப்புகளை 1882 ஆம் ஆண்டுடன் நிறுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 1882 ஆண்டு நவம்பர் ஓராம் திகதியுடன் மருத்துவர் மில்ஸ் அவர்களது சேவையும் நிறுத்தப்பட்டது. அமெரிக்க இலங்கை மிசனது 1882 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் இதுவரையான காலப்பகுதியில் மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் படித்து மருத்துவர்களானவர்களைப் பற்றிய புள்ளிவிவரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மிசனரிகள் ஆரம்பித்த ஒரு துறையானது முடிவுக்கு வந்தமை பற்றிய கவலையும் வெளிப்படுத்தப்பட்டது.

1848 ஆம் ஆண்டு மருத்துவர் கிறீன் ஆரம்பித்த மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் 1882 ஆம் ஆண்டு கற்பித்தல் நிறுத்தப்படும் வரையான காலப்பகுதியில் மொத்தமாக 113 பேர் மருத்துவம் பயின்று மருத்துவர்களாக அங்கீகாரம்(பட்டம்) பெற்றிருந்தனர். மானிப்பாய் மருத்துவக் கல்லூரி மூடப்பட்டு ஏறத்தாழ 100 வருடங்களுக்குப் பின்னரே 1978 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்டது.

அமெரிக்காவுக்குச் சென்ற மருத்துவர் கிறீன் மீள இலங்கை வரமாட்டார் என்பதை நன்கு அறிந்த கொண்ட இலங்கை(பிரித்தானிய) அரசாங்கம் மருத்துவக் கல்லூரிக்கு ஆண்டு தோறும் வழங்கிவந்த நிதியை பாதியாகக் குறைக்கத் தீர்மானித்ததுடன் பின்னர் அதனை முற்றாக நிறுத்துவதென்றும் முடிவு செய்தமை மருத்துவக் கல்லூரி மூடப்படுகின்றமைக்கு பிரதான காரணமாக அமைந்தது.

1873 இல் மருத்துவர் கிறீன் அமெரிக்கா திரும்பிய பின்னர் போஸ்ரனிலுள்ள பிறதேசங்களுக்கு மிசனரிகளை அனுப்பும் அமெரிக்க மிசன் சங்கமானது மருத்துவ மிசனரிகளை யாழ்பாணத்துக்கு அனுப்ப ஆர்வம் காண்பிக்கவில்லை. மருத்துவர் கிறீனது கிறிஸ்தவ ஊழியத்தில் அவர்கள் திருப்தியின்மையைக் கொண்டிருந்தமை காரணமாக இருக்கலாம். கிறீன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஆரம்பநாள்களில் கிறிஸ்தவ மறையைப் பரப்புவதில் ஆர்வம் கொண்டிருந்தாலும் பின்னாளில் அவர் மேலைத்தேச மருத்துவத்தை பரப்புவதிலும் தமது மக்களிடையே பணிபுரியும் தமிழர்களை மேலைத்தேச மருத்துவர்களாக பயிற்றுவிப்பதிலுமே தனது வாழ்வை அர்ப்பணித்திருந்தார். கிறீன் நோய்வாய்ப்பட்டு அமெரிக்காவுக்குச் சென்ற பின்னரும் மானிப்பாயில் தமிழில் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்காக ஆங்கிலத்தில் வெளியான பிரபல்யமான மருத்துவ நூல்கள், மருத்துவ ஆய்வுக் கட்டுரைகளை மொழிபெயர்ப்பதிலும் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படும் மொழிபெயர்ப்பைச் செவ்வை பார்ப்பதிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தார்.

இக்காலப் பகுதியில் அமெரிக்காவிலிருந்து மருத்துவர் ஒருவர் யாழ்ப்பாணம் சென்று மருத்துவக் கல்லூரியைப் பொறுப்பேற்காவிடில் அதனை மூடவேண்டிய நிலை ஏற்படலாம் என்ற உணர்வு கிறீனுக்கு ஏற்பட்டிருந்தது! எனவே இதற்கு மாற்றீடாக அக்காலத்தில் மீளவும் புத்துயிர் பெற்று வந்த யாழ்ப்பாணக் கல்லூரியை பல்கலைக்கழகக் கல்லூரியாகத் தரமுயர்த்துவதன் மூலம் யாழ்ப்பாணக் கல்லூரியில் மருத்துவப் பட்டப்படிப்பைத் தொடர்வது குறித்து கிறீன் தீவிரமாகச் சிந்தித்து வந்தார். இவ்விடயம் குறித்து அமெரிக்க மிசனரிகளுக்கு தொடர்ச்சியாகக் கடிதம் எழுதினார்; ஆலோசனைகளையும் வழங்கி வந்தார். மேலும் கிறீனது சகோதரியும் தந்தையார் நினைவாக 1000 அமெரிக்க டொலரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மருத்துவப் பேராசிரியருக்குரிய பதவிநிலையை உருவாக்குவதற்காக வழங்கியிருந்தமை நினைவு கூரத்தக்கது. கிறீனுக்கு நோயினால் ஏற்பட்ட ஆரோக்கியக் குறைவு அவரை செயலற்றவராக்கியது. அன்றேல் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டையில் மருத்துவக் கல்வியைப் புத்துயிர் பெறச்செய்வதற்காக உண்மையான கிறிஸ்தவனாக வாழ்ந்த கிறீன் எந்தநிலைக்கும் சென்றிருப்பார்!



மருத்துவர் சாமுவேல் செல்லையா போல்



மருத்துவர் ஐடா சோபியா ஸ்கடர்
Image Source : Jaffna Medical Museum

**மானிப்பாய் மருத்துவக் கல்லூரியும் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியும்**

யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் என்ற இடத்தில் அமெரிக்க மிசனரி மருத்துவர் சாமுவேல் பிஸ்க் கிறீன் அவர்கள் 1848 இல் ஒரு டிஸ்பென்சரியையும் பின்னர் மருத்துவக் கல்லூரியையும் ஆரம்பித்தது போல் தமிழ்நாட்டில் வேலூரில் வண. மருத்துவர் ஜோன் ஸ்கடர் அவர்களின் பேர்த்தி ஐடா சோபியா ஸ்கடர் அம்மையார் அவர்கள் 1900 இல் ஒரே ஒரு படுக்கையுடன் மிசன் பங்களாவில் ஒரு மருத்துவமனையை நிறுவினார். இதன் விரிவாக்கமாக 1909 இல் பெண்களுக்கான முறைப்படியான தாதியப் பயிற்சி நெறியையும் 1918 இல் பெண்களுக்கான மருத்துவப் பட்டம் வழங்கும் ஆசியாவின் முதல் மருத்துவக் கல்லூரியையும் ஆரம்பித்தார். இன்று இந்தியாவில் முதல் தரமான மருத்துவக் கல்வியை வழங்கும் கல்விச்சாலைகளில் ஒன்றாக, 6 வளாகங்களைக் கொண்ட பல்கலைக்கழகமாகவும் சர்வதேச புகழ் பெற்ற மருத்துவமனையாகவும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனமாகவும் ஐடா ஸ்கடர் அம்மையார் நிறுவிய வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி விளங்குகிறது. (ஐடா ஸ்கடரது மருத்துவப் பணி பற்றி இந்தத் தொடரின் ஆரம்பத்தில் இரு அத்தியாயங்கள் எழுதப்பட்டுள்ளன.)

**எப்.ஆர்.சி.எஸ் (FRCS) பட்டம் பெற்ற முதல் இலங்கையர்: மருத்துவர் சாமுவேல் செல்லையா போல்**

மருத்துவர் உல்லியம் தில்லையம்பலம் போல் (Dr. William Thiliampalam Paul) அவர்களின் மகன் மருத்துவர் சாமுவேல் செல்லையா போல் அவர்களே இங்கிலாந்து நாட்டின் அரசர்க்குரிய சத்திரசிகிச்சைக் கல்லூரியில் (FRCS) அங்கத்துவம் பெற்ற முதலாவது இலங்கையர் ஆவர். மருத்துவர் சாமுவேல் போல் 1901 ஆம் ஆண்டு இந்த சிறப்புரிமையப் பெற்றார்.

மருத்துவர் சாமுவேல் செல்லையா போல் அவர்களின் மகன் பேராசிரியர் மருத்துவர் மில்ரோய் ஆசிரப்பா போல் (Milroy Aserappa Paul) அவர்களே கொழும்பு மருத்துவப் பீடத்தின் சத்திரசிகிச்சைப் பிரிவின் முதல் பேராசிரியராக விளங்கியவர். மில்ரோய் போல் கொழும்பு மருத்துவப் பீடத்தின் சத்திரசிகிச்சைப் பிரிவின் சிற்பி அல்லது ஞானத்தந்தை என்று போற்றப்படுகின்றார். இங்கிலாந்தின் அரசர்க்குரிய சத்திரசிகிச்சைக் கல்லூரியில் (Royal College of Surgeons) சத்திர சிகிச்சை மருத்துவத் துறை முன்னோடி ஜோன் ஹன்ரர் நினைவாக 1813 முதல் வருடந்தோறும் பேருரைகள் நிகழ்கின்றன. மருத்துவர் மில்ரோய் போல் அவர்களே இங்கு பேருரையாற்ற (Hunterian Oration) அழைக்கப்பட்ட முதல் இலங்கையர் ஆவர். மில்ரோய் போல், மூன்று தடவைகள் ஹன்ரேரியன் விரிவுரையாற்ற அழைக்கப்பட்டவர் என்ற சிறப்புக்குரியவர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமன்காட்டாள் வன்னிகா




# 200 வருடங்களாகியும் ஏன் விடியவில்லை?

மாத்தளை எல்கடுவ பிரதேசத்தின் ரத்வத்தை தோட்டத்தின் பகுதியில் வசித்து வந்த 3 குடும்பங்களின் தற்காலிக வீடுகள் தோட்டத்துறையில் உள்ள தோட்ட உதவி முகாமையாளர் மற்றும் அவரது சகாக்கள் ஆகியோரால் இடிக்கப்பட்டு 14 அப்பாவி மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் மலையக பெருந்தோட்ட மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்தியுள்ளது . இச்சம்பவம் அரச தோட்டத்தில் நடந்துள்ளது.

மலையக மக்கள் சமூகம் இந்நாட்டின் பெருந்தோட்டங்களில் வேலைசெய்து அந்நியச் செலாவணியைப் பெற்று கொடுக்க ஆரம்பித்து இந்த வருடத்துடன் 200 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

200 வருடங்களாக அவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் வாழ்வதற்கு சொந்தக் காணியில்லை. வீடில்லை. இன்னமும் நல்ல வீதிகளில்லை. மருத்துவமனைகள் எட்டாத் தூரத்தில். ஆபத்தான தொங்கு பாலங்களையும் பழுதடைந்த மதகுகளையும் கடந்து, பசிக்கு போதிய உணவு உண்ணாமல் நடந்து பாடசாலைகளுக்கு ச செல்லும் மாணவர்கள் கல்வியில் சரிவர முன்னேற முடியாமல் வறுமைக்குள் வாடுகின்றனர்.

இலங்கையின் தேயிலை, இறப்பர்த் தோட்டங்களில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் நிலைமை மிக மோசம் ! ஏற்கனவே மிக நீண்ட காலமாக ஊதியக்குறைவு, பணிச்சுமை போதுமான உட்கட்டுமானமில்லாத வசதியற்ற வாழ்நிலை !தொழில் பாதுகாப்பு இன்றிய நிலை. குறிப்பாக பணியிடத்தில் அட்டைக்கடி, குளவிக்கடி ,சிறுத்தைப்புலிகளின் நடமாட்டம் தாக்குதல் உயிரிழத்தல், கடும் மழை வெள்ளம், குடியிருப்பு பாதைகள் உடைதல், மண்சரிவு அபாயங்கள் முதலான அசௌகரியமான அபாயமான வாழ்க்கைச் சூழலில் அடிப்படை மனித உரிமைகள் இல்லாத மக்கள் சமூகமாக 200 வருடங்களாக இலங்கையின் மத்திய மலைநாட்டில் வாழ்க்கைப் போராட்டம் நடத்துகிறார்கள்.

இலங்கையின் பொருளாதாரப் பேரிடரினால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இங்கேதான் வாழ்கின்றன. தற்போதைய பொருளாதார நெருக்கடியும் பொருட்களின் உச்ச விலையேற்றமும் தொழிலாளர்களின் மிகக்குறைவான நாட்கூலியும் வறுமைக்கு மேல் வறுமையென மலையக மக்களை உறைய வைத்துள்ளன.

இலங்கையில் மத்திய மலைநாடு எப்போதும் ரசிக்கத்தக்க இயற்கை செழிப்பு மிக்கதொரு இடம். ஆனால் இங்கே வாழும் பத்து லட்சம் மக்களின், தொழிலாளர்களின் நிலை எப்போதும் அவலம் நிறைந்ததாகவே இருக்கின்றது. மலையகத்தின் சுமார் 10 லட்சம் வரையான இந்திய வம்சாவளித் தமிழர்களில் சுமார் இரண்டு லட்சம் பேர் தேயிலைத் தோட்டங்களிலும் இறப்பர் தோட்டங்களிலும் வேலை செய்கிறார்கள்.

மலையகத்தில் அதிகமான மதுபானக் கடைகள் உள்ளன. தோட்டங்களில் மலையகப் பெண்களின் உழைப்பை தோட்டக் கம்பனிகள் சுரண்டுகின்றன. சுரண்டலுக்குப் பின்னர் கிடைக்கும் அற்ப கூலிப் பணமும் பெரும்பாலும் மதுபானக் கடைகளால் உறிஞ்சப்படுகின்றன. சில மதுபானக்கடைக்காரர்கள் தோட்டத்தொழிலாளர் குடும்பங்களிலுள்ள ஆண்களுக்கு "கடன் கொப்பி" போட்டு கடனுக்குக் குடிக்கக் கொடுக்கிறார்கள். சம்பளம் போட்டதும் ஆண்கள் அப்படியே மதுபானக்கடைக்குப் போய்விடுகிறார்கள். அங்கு மதுபானக் கடையில் கடனை அடைத்துவிட்டு மேலும் குடித்துவிட்டு வருகிறார்கள். ஏற்கனவே பெண்களின் மிகக்குறைந்த கூலியில் வறுமையில் தள்ளப்பட்டுள்ள குடும்பங்கள் இந்தச்செயற்பாடுகளால் மேலும் துன்பத்தில் அமிழ்கின்றன. தொடர் கடனாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் மன அழுத்தங்களினாலும் குழந்தை உணவு, பிள்ளைகளின் கல்வி, உடல் நிலை போசாக்கின்மை ஆகியவற்றாலும் மலையகத் தமிழ் குடும்பங்கள் அபிவிருத்தியில்லாமல் அழிகின்றன. ஆண்கள் மதுபானத்துக்கு அடிமைப்படும்போது பெண்களே குடும்பத்தின் சுமையைச் சுமக்கும் தொடர் நிலையும் துயர நிலையும் ஏற்படுகிறது. இதனால் குடும்பச் சண்டை வன்முறைகள் ஏற்படுகின்றன. குடும்ப வன்முறை, போசாக்கின்மை முதலியன மலையகக் குழந்தைகளை உடல் உள ரீதியில் கடுமையாகப் பாதிக்கின்றன. அவர்களின் வாழ் நிலையில் மனநிலையில் துயரமும் விரக்தியும் வளர்வதாகவும் உள்ளது. மீண்டும் பிள்ளைகளின் பசிபோக்க கூடையைச் சுமந்து மீண்டும் அந்த மோசமான பாதையூடாக தேயிலைத் தோட்டங்களுக்கும் இரப்பர்

தோட்டங்களுக்கும் நடக்கிறார்கள் மலையகப் பெண்கள். அத்துடன் மலையகச் சிறுவர், சிறுமியர் வெவ்வேறு மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டு அவர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அதேவேளை மலையகத்தில் இன்னும் பல இடங்களில் மதுபானக் கடைகளைத் திறக்க "சாராய அரசியல்வாதிகள்" சிலர் முயற்சிப்பதாக மலையகத்தின் சமூகச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அப்படியென்றால் இந்திய வம்சாவளிச் சமூகத்தையும் அதன் பிள்ளைகளின் எதிர் காலத்தையும் தொடர்ந்து இருண்டுபோகச்செய்வதும் விடிவற்ற சமூகமாக அவர்களை முடக்கி அடக்கி வைப்பதும் " சாராய அரசியல்வாதிகள் " கொண்டிருக்கும் திட்டமாகவுள்ளமை தெளிவாகிறது.

மலையகத்தில் கடந்த 200 ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதாரத்துக்காக வியர்வையும் கண்ணீரும் சிந்தியபடி " பஞ்சம் தின்று" வாழ்ந்த ஒரு சமுதாயத்தின் அர்த்தமுள்ள இருப்பும் அரசியலும் அபிவிருத்தியும் ஏன் இன்றுவரை சாத்தியப் படவில்லை ?

இன்றுவரை உட்கட்டுமான அபிவிருத்தியிலும் சமூக அபிவிருத்தியிலும் அரசியல், சமூகபொருளாதார மேம்பாட்டிலும் மலையகம் ஏன் பின்னடைந்த நிலையிலேயேயுள்ளது?

மலையக மக்களின் அபிவிருத்தியையும் உரிமைகளையும் நிலை நாட்டிவதாகக் கூறி தேர்தல்களில் வாக்கு வேட்டையாடும் அரசியல்வாதிகள் பேரின அரசியல் முதலாளித்துவத்துக்குள் உருகிக் கலந்துவிடுகிறார்கள். மலையக அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் பேரின அரசியல் முதலாளித்துவத்தின் முகவர்களாக தங்களை உருமாற்றிக்கொண்டு சுகபோக வாழ்க்கை வாழ்கின்றனர். மலையகத் தொழிலாளர் குடும்பங்களின் அன்றாடப் பிரச்சனைகளும் அடிப்படைப் பிரச்சினைகளும் மலையக அரசியல்வாதிகளின் நாடாளுமன்ற அரசியலுக்கான பேசுபொருட்களாக மட்டுமேயுள்ளன. மாத்தளை எல்கடுவ பிரதேசத்தின் ரத்வத்தை தோட்டத்தின் பகுதியில் வசித்து வந்த 3 குடும்பங்களின் வீடுகள் இடிக்கப்பட்டு அந்தக்குடும்பங்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் மலையக மக்களைப் பிரதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில், பிரிந்து நின்று, பிளந்து நின்று, ஒருவரையொருவர் குற்றம்சாட்டி தத்தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக விவாதித்தமை "ஏழை மக்களின் வலியில் வேதனையில்" நடத்தப்படும் அரசியலை அப்பட்டமாக வெளிப்படுத்தியது. வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை மலையக மக்களின் அரசியல் சூழல் சுட்டி நிற்கிறது.



# உணர்ந்தினம்

பாகம் 2

இராகவன்

போன கிழமை ஒரு விசயத்தைச் சொல்ல மறந்திட்டன்.நான் இங்கிலீஸ் பள்ளிகூடத்துக்கு படிக்க வாறதுக்கு முன்னம் ஆண் பாடசாலையில படிச்சதாச் சொன்னனான். முந்தியயொரு காலத்தில் அது ஆம்பிளப்பிள்ளையள் மட்டும் படிக்கிற பாட சாலையாயிருந்தது.பொம்பிளப்பிள்ளையள் எல்லாம் கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத்தில தான் படிச்சதெண்டும் அப்ப தானும் அங்க தான் படிச்சதெண்டும் எங்கட அம்மா சொல்லுறவா.

அதால சரஸ்வதி வித்தியாலயத்தைப் பெண் பாடசாலை எண்டு சொல்லுவினம். நான் படிச்ச காலத்தில் (19821989)ஆண் பாடசாலை , பெண் பாடசாலை இரண்டுமே கலவன் பாடசாலையளா போச்சு மற்றது.நான் படிக்கேக்குள்ளை தொழில்முறைப்பாடமெண்டு விவசாய விஞ்ஞானம் மட்டும் தான் இருந்ததெண்டு சொன்னனான். அதில ஒரு சின்னத்திருத்தம் . ஆம்பிளைப்பிள்ளையளுக்கு விவசாய விஞ்ஞானமும், பொம்பிளைப் பிள்ளையளுக்கு மனையியலும் தொழில்முறைப் பாடங்களாயிருந்தது.

விவசாய விஞ்ஞானத்தை எங்களுக்கு வல்லிபுரம் வாத்தியார் தான் படிப்பிச்சவர். யேசுநாதர் பிறந்த இடம் பெத்தலகேம். ஆனால் வல்லிபுரம் வாத்தியார் ,'பெத்தலகெம்' எண்டு தான் சொல்லுவார். அதால எங்கட வகுப்புப் பொடியள் சிலர் சேர்ந்து அவருக்கு 'பெத்தலகெம் வல்லிபுரம்' எண்ட பட்டம் வைச்சிட்டாங்கள். மனையியல் படிப்பிச்சது ஒரு காலத்தில் கரவெட்டியில வெகுபிரபலமான சாத்தியாராயிருந்த சாத்திரி சம்பரப்பிள்ளை வாத்தியாரின்ர மகள் யோகேஸ்வரி ரீச்சா எண்டதுமே ஞாபகத்தில இருக்குது.

03

இதுக்குள்ள என்னால எண்டைக்குமே மறக்க முடியாத சங்கதியொண்டுமிருக்கு.நான் அப்ப கவின் கலைப் பாடமெண்டு சித்திரம் தான் எடுத்தனான். சித்திரம் படிப்பிக்கிறதுக்கெண்டு ஆக்கள் இல்லாட்டிலும் சோதனை நடக்கேக்குள்ள நாங்கள் கீறிக் கலறடிச்சுக்காட்டுற படங்களுக்கு வகுப்பாசிரியர் தான் 'மார்க்ஸ் 'போடுவார். அப்ப சங்கீதம் படிப்பிக்கவும் ஆக்களில்லை. அதால எல்லாரும் சித்திரந்தான் கீறுறது .

பிறகு சங்கீதத்துக்கெண்டு ஒரு ரீச்சர் வந்திட்டா . அவவுக்கு கால் ஏலாது .மூண்டு சில்லுச்சைக்கிள்ள தான் வாறவா. அவா வந்தாப்போலை எல்லாரும் சங்கீதந்தான் எடுக்க வேணுமெண்டு அதிபர் சொல்லிப்போட்டார். பிறகென்ன திருவிழாத் தொடங்கிட்டுது.அப்ப எனக்கு ஒழுங்காய் ஒரு தேவாரங் கூடப் பாடத் தெரியாது . இந்தச் சீத்துவத்தில சங்கீதம் படிக்கிறதெண்டால் எப்படியிருக்கும் ?

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org